# களத்தில்




தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து அந்த உன்னத இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றிவந்த ஒரு அபூர்வமான மனிதரை நாம் இழந்து விட்டோம். விடுதலைக்காக எரிந்து வந்த ஒரு இலட்சியச் சுடர் அணைந்து விட்டது. பகைவனின் கோழைத் தனத்திற்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


(27.01.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (201) அன்பளிப்பு : 60 p


# சந்திரிகா அரசே குமாரைக் கொன்றது!

## "ஆயுதப் போராட்டம் வாயிலாகவே விடுதலை சாத்தியமாகும் என நம்பியவர்"

### தமிழீழத் தேசியத் தலைவர் புகழாரம்



துணிச்சல் நிரம்பிய தமிழ்த் தலைவர் திரு. குமார் பொன்னம்பலத்தின் இழப்பு சிக்கலான சரித்திர காலகட்டத்தில் இடம்பெற்றுவிட்டது. தமிழ் மக்களின் உரிமைகளை தைரியமாக எடுத்துச் சொன்ன குரலை மௌனமாக்குவதற்காகவே இப் படுகொலையை சிறீலங்கா அரசும் அதன் தமிழ் கூலிக்குழுக்களும் திட்டமிட்டன என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பணிமனையால் குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பாக விடுக்கப்பட்ட செய்தியில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அவரது உயிருக்கும் உடமைகளுக்கும் விடுக்கப்பட்ட தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் மத்தியில் சிறீலங்கா தலைநகரின் மையப் பகுதியில் வாழ்ந்து கொண்டே தனது இனவாத எதிரிகளுக்கு அவர் சவால் விடுத்தார். அவரது உரைகளும் எழுத்துக்களும் முரண்பாடன விடயங்களை தொட்டு உண்மையையும், நீதி பற்றிய பிரஞ்ஞையையும் கொண்டனவாக அமைந்தன. கொடூரமான சிங்கள அரசின்கரங்களில் தொடர்ச்சியாக வதைக்கப்பட்ட பல்லாயிரம் கொழும்பு வாழ் தமிழ் மக்களின் உரிமைக்கும் சுதந்திரத்திற்குமாக பேசினார் என அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. குமார் பொன்னம்பலத்தின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவருக்கு "மாமனிதர்" என்ற கௌரவ விருதை வழங்கி தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்.

அச் செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியற் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மையுடன் நெஞ்சுறுதியுடன் மனிதநீதிக்காக குரலெழுப்பிவந்தவர். சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களப்பேரினவாதத்திற்கு சவால்விடுத்து வந்தவர். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்த போதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.

திரு. பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றாளர். தமிழீழத் தாயகத்தில் ஆழமான பாசம் கொண்டவர். தமிழர் தேசம் தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திர நாடாக உருவாக வேண்டுமென ஆவல் கொண்டவர். ஆயுதப் போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும், எமது இயக்கத்தின் கொள்கையையும் ஆதரித்தார். எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல் கொடுத்துவந்தார். நேர்மைத் திறனையுடன், அபாரமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும்பணி மிகவும் பாராட்டத்தக்கது.

திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்து விடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு."

## தொடரும் ஓயாத அலைகள் 3

### ஆனையிறவை பாதுகாக்க சிங்களம் பெரும் படைக்குவிப்பு!

பெரும் நிலமீட்புச் சமராக நகர்த்தப்பட்டு வரும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கை தொடர்ந்து வருகின்றது. வன்னி பெருநிலப் பரப்பில் கடந்த வருடம் நவம்பர் 2ஆம் திகதி ஆரம்பமான சமர் யாழ்.குடா நாட்டை மீட்டெடுக்கும் வகையில் நகர்த்தப்பட்டு வருகின்றது.

ஆனையிறவு பெரும் படைத்தளத்தின் தெற்கு மற்றும் கிழக்கு பாதுகாப்பு வலயங்களை சிதைத்தழிக்கப்பட்டு 54வது படைப்பிரிவின் தலைமைப் பணிமனை அமைந்துள்ள பிரதேசங்களை புலிகளின் படையணிகள் முற்றுகையிட்டு வருகின்றன. இதேவேளை வடமாராட்சி கிழக்கு மற்றும் தென்மாராட்சி, வலிகாமம் கடலோரங்களில் அமைக்கப்பட்டுள்ள சிங்கள இராணுவ நிலைகள் தாக்கப்பட்டு வருகின்றன.

புலிகளின் இப்படை நகர்வுகளை எதிர்கொள்ள முடியாத யாழ்.குடா இராணுவத் தலைமை பெருமளவிலான படைக்குவிப்பை ஆனையிறவு - இயக்கச்சி - பளை பகுதியெங்கும் மேற்கொண்டுள்ளனர். வன்னியில் எமது படையணிகளினால் விரட்டியடிக்கப்பட்ட சிறீலங்காவின் 53வது படைப்பிரிவு யாழ்.குடா பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என சிங்கள அரசு அறிவித்துள்ளது. புதிய தரைப்படைத் தளபதிகளும் யாழ்.குடாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## பீரங்கிகளை அகற்று!

### - யாழ்.குடாவில் மக்கள் போராட்டம்-

யாழ்.குடாநாட்டில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தமது பீரங்கிகளை நிறுத்தி ஆனையிறவு சுற்றாடல் மற்றும் பிரதேசங்களில் உள்ள புலிகளின் நிலைகள் மீது தாக்குதல்களை சிங்கள இராணுவம் நடாத்தி வருகின்றது. இதன் மூலம் புலிகளின் பதிலடித் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்கு இராணுவம் முயன்று வருகின்றது. இவ் உத்தியைக் கண்டித்து யாழ். குடாவில் பாதிக்கப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தியுள்ளனர்.

தென்மராட்சி முல்லையடிப் பகுதியில் ஆரம்பமான இவ் ஊர்வலம் பளை வரை இடம்பெற்றது. சற்றில் பளை இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் தமது ஆட்சேப மனுவை பொதுமக்கள் கையளித்தனர். ஆயினும் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகள் தமது நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

இதேவேளையில், ஆனையிறவு முதல் பளைவரை புதிதாக குவிக்கப்பட்ட படையினர் தமது பாதுகாப்பு அரண்களை அமைக்கவும் பதுங்குகுழிகளை அமைக்கவும் அப்பகுதி தென்னைமரங்களை அழித்து வருகின்றனர். புலோப்பளை மற்றும் சோரன்பற்றுப் பகுதிகளில் மட்டும் ஆயிரத்திற்கு மேற்பட்ட தென்னைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அண்மைக்காலங்களில் சுமார் 10 000 தென்னை மரங்கள் பளைப் பிரதேசத்தில் அழிக்கப்பட்டுள்ளன. இது யாழ்.குடாவில் தேங்காய்ப் பஞ்சத்தை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகின்றது.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# மனிதம் 1983

இந்தகையதொரு ஆனந்த அதிர்ச்சி அவர் சற்றும் எதிர்பாராதது. அதிகம் ஏன்?

வாழ்க்கையில் இனி, தனக்கு சந்தோஷம் - சாந்தி என்ற சொற்பதங்களுக்கே இடமில்லை என்ற முடிவுக்கு அவர் வந்து ஏறக்குறைய ஒருமாதத்துக்கு மேலாகிவிட்ட நிலையில்

அந்த முடிவை முற்றிலும் மாற்றுகின்ற சஞ்சீவியாய் இன்று இந்தக் கடிதம் வந்திருக்கிறது.

காலத்தின் சுழற்சி எத்தனையெத்தனையோ ரஸவாதங்களைத் தன்னுள் நிகழ்த்தி,

எந்தெந்த நேரம் யார் யாருடைய மனச்சாட்சியை எல்லாம் சீண்டிப் பார்க்க வேண்டுமோ-

தவறாமல் அதைச் செய்தே தீருமென்பதற்கு இதோ அவர் கையிலிருக்கும் இந்தக்கடிதமும், கண்களில் வழிந்தோடும் கண்ணீரும் சத்திய சாட்சிகள்.

பதினாறு வருடங்களுக்கு முன் நிகழ்ந்தவை- அவரது கண்ணீர்த்திரையினூடே மங்கலாய்த் தெரிகின்றன.

◇ ◇ ◇

அங்குமிங்குமாய் மேலே கிளம்பிய புகைச்சுருள்கள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிய, ஜீப் வண்டியின் வேகத்தை மேலும் அதிகமாக்கினார் பொலிஸ் அதிகாரி கருணாரட்ணா.

"கலவரம்" ஆரம்பமாகிவிட்டதாயும் உடனே கடமைக்கு வரும்படியும் காலையில் கிடைத்த தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி விரைந்து கொண்டிருக்கையில், தான் மேற்கொள்ளவேண்டிய "கடமை"யின் பரிமாணம் பற்றி அவருடைய மனசுக்குள் வாதப்பிரதிவாதங்கள் நிகழ்கின்றன.

அதற்கு முதல் தினம் வெலிக்கடையின் சிறைச்சாலையில் ஐம்பத்திரெண்டு தமிழருக்கு நேர்ந்த முடிவு பற்றி அறிந்தபோது அவருடைய அடிமனதில் தோன்றி முழுமனதையும் ஆக்கிரமித்துக் கொண்ட உணர்வு ஒரு குரூர திருப்தி- இப்போதும் அவருக்குள் தோன்ற-

"தமில பண்டி" என்ற வார்த்தைகளைக் கருணாரட்ணாவின் உதடுகள் வெறுப்போடு முணுமுணுத்தன.

வீதிகளில், சந்துகளில், முடக்குகளில் அங்குமிங்குமாய்ச் சிதறி ஓடிக்கொண்டிருந்த மக்கள் கூட்டம் கண்களில் தெரிய-

வார்த்தைகள் தெளிவற்ற சுக்குரல் சத்தங்கள் காதில் விழுகின்றன.

சாரம் அணிந்த கும்பலொன்று கத்திகள், கோடரிகள், பொல்லுகளுடன் வாய்க்கு வந்த அசிங்கமான வார்த்தைகளால் திட்டியபடி "அந்தச்" சனங்களைத் துரத்திக்கொண்டிருந்தது-

இனவெறியின் குறியீடாய்- குரூரமான சிரிப்பொன்று இதழ்க்கோடியில் தோன்றிமறைய-

ஜீப் வண்டியை வீதியோரம் நிற்பாட்டிய கருணாரட்ணா பாய்ந்து கீழே குதித்தார்.

உடனடியாக நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். அவரைப் போன்ற ஒரு அதிகாரியினால் நிச்சயம் அதைச்செய்ய முடியும்.

ஆறரை அடிக்கும் மேலான உயரமும் அதற்கேற்ற உடல்வாகுடன் நிமிர்ந்த தோற்றமும், முறுக்கிவிடப்பட்ட மீசையும், சிங்கப் பார்வையும்-

ஆனானப்பட்ட காடையர்களையே அவருக்கு முன்னால பணிய வைத்திருக்கின்றன.

இப்போதும் அவர் அதைச்செய்யலாம்.

ஆனால் அவர் விரும்பவில்லை. நிச்சயமாய் விரும்பவில்லை.

எனினும்- விரும்பவில்லை என்பதை வெளிக்காட்ட முடியாத பதவி அவருடையது.

குறைந்த பட்சம், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அவர் முயற்சி செய்வதாகவேனும் மற்றவர்கள் நினைக்க வேண்டும்....

உரத்துச் சத்தமிட்டு ஏதேதோ சொல்லியபடி வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்த கருணாரட்ணா-

தமிழ் இளைஞன் ஒருவனை இரண்டு காடையர்கள் பொல்லுகளால் அடித்துக் குற்றுயிராக்கிக் கொண்டிருந்ததைக் கண்டார்.

அவன் இனிப் பிழைக்கமாட்டான் என்பது தெரிய- அடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கித் துப்பாக்கியை நீட்டி, தாறுமாறாய் ஏதோ திட்டித் தாத்தினார்.



அவர்கள் போய்விட்டார்கள்.

"ஆ... ஐயோ...! அம்மா... ஆ... தண்ணி..." ரத்தம் தோய நிலத்தில் கிடந்தவன் சன்னதத்தில் முனகிக்கொண்டிருந்தான்.

எதையும் காணாதவர் போல, திரும்பிக்கூடப் பார்க்காமல் அப்பால் நடந்தார் அந்தப் பொலிஸ் அதிகாரி.

தமிழர் வீடுகள் உடைக்கப்பட்டு தமிழ்க்கடைகள் எரிக்கப்பட்டு, எங்கும் புகை மண்டலமாய்- மரண ஓலங்கள் எதிரொலி செய்து கொண்டிருந்தபோது தான்-

அந்தக் காட்சி கருணாரட்ணாவின் கண்களில் பட்டது.

வீடொன்றினுள்- நாலைந்து ரயர்கள் அடுக்கப்பட்டு அவற்றில் தீ மூட்டப்பட்டிருந்தது. அதைச் சுற்றி நாலுகாடையர்கள் நிற்க-

ஒரு சுவர்க்கரையோடு ஒதுங்கிநின்ற நாலு பேர்-ஒரு ஆண், ஒரு பெண், ஒரு சிறுவன், ஒரு சிறுமி-

அவர்கள் அந்த வீட்டுக்குச் சொந்தமான தமிழர்கள்- காடையர்களுக்குக் கைகூப்பி- அழுது மன்றாடி அவர்களிடம் உயிர்ப்பிச்சை கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதைக் கருணாரட்ணா ஊகித்துக் கொண்டார்.

"உடனே போய் அவர்களைக் [illegible]" நியாயமுள்ள ஒரு பொலிஸ் அதிகாரியாய்- உள்ளேயிருந்து அவரது மனக்குரல் ஒரு தரம் உசுப்பியது.

ஒரு தரம் தான்.

மீண்டும் இனவெறி விஸ்வரூபம் எடுக்க- நின்ற சுவடு தெரியாமல் மெல்ல அங்கிருந்து அகன்றார்.

"ஐயோ ! எங்களைக் கொல்லாதேங்கோ...! ஆண்டவா! ஐயோ ! என்ர பிள்ளையள்...! ஆராவது காப்பாத்துங்கோ...! ஆ... ஐயோ...! அம்மா...!"

வானைப் பிளந்து கேட்ட அந்தத் தீனக்குரல்களைத் தொடர்ந்து- காற்றோடு கலந்து வந்து கருணாரட்ணாவின் நாசியில் நுழைந்தது அந்தப் பொசுங்கும் மணம்.

அவருடைய இதழ்க்கோடியில் இப்போதும் அதே சிரிப்பு ஒரு கணம் தோன்றி மறைந்தது.

◇ ◇ ◇

மனைவி இறந்துபோனதும், கருணாரட்ணா வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும், ஒரே மகன் கனில் கடற்படையின் கப்டனாகப் பதவி உயர்வு பெற்றதும் காலத்தின் நகர்வுடன் அவர் வாழ்க்கையில் பதிவாக்கப்பட்ட முக்கியமான நிகழ்ச்சிகள்.

இந்த நிலையில்தான் ஒரு மாதங்கள் முன்பு கனில் பயணம் செய்த பீரங்கிப் படகு கடலில் மூழ்கடிக்கப்பட்டுவிட்டதாகச் செய்தி வந்தது.

அவர் இதயம் நொறுங்கிப்போனார்.

அவரது உயிர்வாழ்தலுக்கான ஒரே மையமாய் விளங்கிய அருமை மகன் என்ன ஆனான்? எங்கே அவன் ?

கடலில் மூழ்கினானா?

கைது செய்யப்பட்டானா ?

சாகடிக்கப்பட்டானா?

விடைகாண முடியாத வினாக்கள் மனத்துள் பயங்கரமாய் வதைசெய்ய-

துடிதுடித்துப் போனார்- அவருடைய உயிரான கனிலுக்கு என்ன நடந்தது என்பதை யாராவது தனக்குச் சொல்லமாட்டார்களா என உருகித்தவித்தார்.

இரத்த வெள்ளத்தில் குற்றுயிராய் வீதியில் அனாதரவாய் கிடந்து முனகிய இளைஞனுடைய தோற்றம் அடிக்கடி இவர் நினைவை இப்போது ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தது.

"அது தான் காரணமோ?"

தீயில் வீசப்பட்டவர்களின் தீனக்குரல் தனது நெஞ்சில் மோதி அறைவது போன்ற வேதனையில் அடிக்கடி துடித்துப் போகிறார்.

"அது தான் காரணமோ?..."

அவருடைய இயல்பான கம்பீரம் குலைந்து கண்கள் குழிவிழுந்து நடைப்பிணமாய் ஆகினார்.

தனது வேதனை முழுவதையும் வார்த்தைகளாக்கி மகனைத் தேடுவதாக மனமுருகும் விளம்பரம் ஒன்றைப் பத்திரிகையில் வெளியிட்டார்.

இனி என்றும் திரும்பி வரமாட்டான் என நினைத்திருந்த அவரது அருமைமகன் கனிலின் கையெழுத்தில் வந்திருந்த அந்தக் கடிதத்தின் மீது தன் கண்களையே நம்ப முடியாதவராய் பத்தாவது தடவையாக மீண்டும் பார்வையை ஓட விடுகிறார் கருணாரட்ணா.

ஆங்கிலத்தில் எழுதியிருந்தான்

என் நேசத்துக்குரிய அப்பாவுக்கு

எதிர்பாராத அதிர்ச்சியையும், இனிய சந்தோஷத்தையும் இந்த கடிதம் உங்களுக்குத் தரும் என்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள் மகன் இறந்து போனான், அல்லது சாகடிக்கப்பட்டான் என்றெண்ணிக் கடந்த ஒரு மாத காலம் நீங்கள் அனுபவித்திருக்கக்கூடிய வேதனையை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது.

பத்திரிகையில் நீங்கள் கொடுத்த விளம்பரம் கண்டு, உங்கள் வேதனையின் பரிமாணத்தைப் புரிந்து கொண்டு இவர்களாகவே கடிதம் எழுதும் அனுமதியை எனக்கு வழங்கினார்கள்.

அப்பா,

மனிதாபிமானம் என்றால் என்ன என்பதையும், வாழ்க்கை என்பதன் பரிபூரணமான அர்த்தத்தையும் நான் இங்கு நேரடி அனுபவமாய் உணர்ந்து கொண்டிருக்கிறேன். ஒரு கைதியாக அல்ல ஒரு நண்பனாகவே இங்கு நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்கு- கருணாரட்ணா என்ற (முன்னாள் சிங்கள) பொலிஸ் அதிகாரிக்கு ஆச்சரியம் தரும் விடயமாகவே இருக்கும். எனினும் அதுவே உண்மை. விரைவில் உங்களைச் சந்திக்கும் காலம் கனியும் என்று நம்புகிறேன். அன்புடன் கனில். சந்தோஷ மிகுதியில் அவருடைய கைகள் நடுங்கின.

அருமை மகன் உயிரோடு நலமோடு இருக்கிறான் என்ற செய்தி கொடுத்த சந்தோஷம் தோற்றுவித்த கண்ணீருக்கப்பால் இன்னும் ஏதோ ஒன்றுக்காக கருணாரட்ணா தொடர்ந்தும் அழுதுகொண்டேயிருந்தார். ■

— சபரி —

# இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புள்ள தமிழீழச் சகோதரர்களே!

## விடுதலையை நமதாக்க உழைத்திடும் தேசநேச நெஞ்சங்களே !

நொருங்கத் தொடங்கிவிட்ட சிறீலங்காவின் ஆனையிறவுப் பெருந்தளம் என்று சாம்பல் மேடாகும். ஆடத்தொடங்கி விட்ட குடாநாட்டு சிங்கள முகாங்களெல்லாம் என்று சரிந்து வீழும் என நான் பார்த்து நாம் எல்லாம் காத்திருக்கும் வேளையிலே பிறந்து வந்துள்ள புத்தாண்டின் மற்றோராயிரமாம் ஆண்டின் தொடக்க நூற்றாண்டின் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

சென்ற ஆயிரமாம் ஆண்டு தொடங்குகையில் சனநாத மங்கலம் என்ற பெயரில் பொலநறுவையில் சோழராட்சியின் புலிக்கொடி பறந்து கொண்டிருந்தது. அன்றும் தமிழர்களுடைய அரசியல் உரிமைகளில் தேவையில்லாது தலையிட்டு அதற்கான பாடத்தை சிங்கள மன்னர்கள் படித்துக் கொண்டிருந்தனர். இவ்வாயிரமாம் ஆண்டு பிறக்கையிலும் தமிழர்களின் வாழ்வை மறுத்து அவர்களை அழிக்க தன் படைகளை தமிழர் தாயகம் எல்லாம் பரப்பி வைத்துள்ள சிங்கள அரசு அதற்கான பாடத்தை வன்னியிலும் ஆனையிறவிலும் யாழ்குடா நாடெங்கும் தமிழீழத் தமிழர்களின் தேசிய விடுதலை இயக்கமாம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் படித்துக் கொண்டிருக்கிறது. மீண்டும் புலிக்கொடி என்றால் கனவிலும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் மிரளும் காலம் தோன்றியுள்ளது. யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வரும் சிறீலங்காத் தளபதிகள் நெஞ்சுவலி வந்து சாகும் அளவுக்கு நிலை மோசமோ எனச் சந்தேகம் கொள்ளுமளவுக்கு சிறீலங்காவின் யாழ்ப்பாணத் தளபதி ஜெயக்கொடி மாரடைப்பால் செத்த சம்பவமும் ஆனையிறவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தளபதிகள் அங்கு சில மாதம்கூட நிலைக்காது ஓய்வு பெற்று தப்பியோடும் செய்திகளும் மக்களை சந்தேகிக்க வைக்கிறது. எது எப்படியிருப்பினும் யதார்த்த நிலை அது தான் . இனிச் சிங்களப் படையால் தமிழீழத்தின் எந்த மூலை முடுக்கிலும்கூட நிம்மதியாக நித்திரை செய்ய முடியாது. ஆனால் அதைப் பற்றிய அக்கறையற்றவர்களாக சிங்கள மக்களின் வறுமையை வேலையின்மையை தம் போருக்கு ஆட்சேர்க்கும் பணிக்கு மூலதனமாக கொள்ளும் ரத்வத்தை சந்திரிகா பண்டாரநாயக்கா குடும்பங்கள் தேர்தல் விளையாட்டுக்களும் பதவிப் பிரமாண வைபவங்களும் நடாத்தி மகிழ்ந்து கொண்டிருப்பது தென்னிலங்கையின் வேதனையான யதார்த்தக் காட்சிகளாக உள்ளன. இந்தக் கோலங்களை சிங்கள மக்களும் இனித் தாங்க மாட்டார்கள் என்பதற்கு ஆதாரமான பல சங்கிலிச் சம்பவங்கள் சிங்களப் பகுதிகளில் அதிகரித்து வருவதினை மறைப்பதற்கு பத்திரிகையாளர்களையும் சுதந்திரக் கருத்துக் கூறுபவர்களையும் சந்திரிகா அரசாங்கம் கூசாமல் கொன்றழிப்பதும் வெருட்டல் பேச்சுக்கள் பேசுவதும் மற்றொரு பக்கத்தில் அதிகரித்து செல்கின்றது. கூட்டு மொத்தமாக ஒரு சர்வாதிகார ஆட்சியொன்று தன் ஆயுதப் படைகளின் துணையுடன் மீண்டும் பேயாட்சி செய்யப்புறப்பட்டுள்ளது. அதற்குப் பெயர்தான் 2000ஆம் நூற்றாண்டின் சந்திரிகா அரசாங்கம். அம்மையார் 2000இல் ஆட்சிக்கு வந்தவுடன் செய்துள்ள முதல் வேலை சுதந்திரமாகத் தனது கருத்துக்களை தெரிவித்து தமிழர்களின் இன்றைய நிலையின் உண்மைக் காட்சிகளை உலகிற்கு எடுத்துக்காட்டி வந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களை படுகொலை செய்தமை அமைந்துள்ளது. இந்தப் படுகொலை மூலம் இரண்டு செய்திகளை சந்திரிகா அரசாங்கம் வெளியிட்டுள்ளது. ஒன்று தமிழர்களுடைய கருத்துச் சுதந்திரத்தை சிறீலங்கா ஒரு பொழுதும் அனுமதிக்க மாட்டாது என்பது அடுத்தது தமிழர்கள் மேல் நீதி விசாரணையின்றியே சிறீலங்கா நினைத்த மாத்திரத்தில் தான் நினைத்த மாதிரி அவர்களைத் தண்டிக்கும் என்பது. இது எதிரிகளைப் பார்க்கும் பார்வை. இதன் மூலம் சிறீலங்கா தமிழர்களை எதிரிகளாகப் பார்க்கின்றது என்பது மீண்டும் தெட்டத் தெளிவாகியுள்ளது. இந்நிலையில் சிறீலங்கா அரசாங்கம் என்றுமே தமிழர்களைத் தன் குடிகளாகக் கருதி அவர்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை உருவாக்க மாட்டாது என்பது மீண்டும் வெட்ட வெளிச்சமாகியுள்ளது. எனவேதான் குமாரின் மூச்சு சிறீலங்காவால் நிறுத்தப்படவில்லை பேச்சுவார்த்தை என்ற பேச்சை எடுப்பவர்களின் பேச்சுத்தான் சிறீலங்காவால் நிறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் கருதுகின்றனர். குமாரின் கொலையும் அவர் தமிழினத்தைச் சார்ந்தவர் என்பதற்காக நடாத்தப்பட்டுள்ள பகிரங்க இனப்படுகொலையே. இந்த இனப்படுகொலை மூலம் இவரைச் சந்தித்து செம்மணி இனஅழிப்பு குறித்த தகவல்களை வெளியிட முயன்ற ராஜபக்ஸ இவரைச் சந்திக்கும் வாய்ப்பும் அடைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் மீண்டும் சிறீலங்காப் படைகளின் இனஅழிப்புக்கள் குறித்த மேலதிக விபரங்கள் வெளியாவதும் தடுக்கப்பட்டுள்ளது. இது சிறீலங்கா எல்லாத் திட்டமிடல்களையுமே இராணுவ நலன்களுக்காகப் பயன்படுத்தி வருகின்றது என்பதற்கு மற்றொரு சான்றாகவும் அமைகிறது. இந்நிலையில் சிறீலங்கா தனது இராணுவத்தின் கொடுமைகளைத் தானே அம்பலப்படுத்திக் கொண்டு பெரிய அளவிலான யுத்தங்களை தமிழர் பகுதிகளின் மேல் தொடுத்து தனது ஆயுத பலத்தினால் தமிழ் மக்களின் அரசியல் பணிவைப் பெறும் அரசியல் நடவடிக்கைகளை வேகப்படுத்தும் என்று நாம் கூறாமலே அனைவரும் எதிர்பார்க்கின்ற ஒன்று. இந்தப் போர்களின் மூலம் தமிழர் தாயகத்தினை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துதல் என்பது சிறீலங்காவின் மற்றொரு அரசியல் திட்டம். இதனை உணராது ஐரோப்பிய யூனியன் 304 மில்லியன் ரூபாக்களை அம்பாறை, அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்தும் திட்டங்களுக்கு கொடுத்துள்ளமை அவர்கள் எதிர்பார்க்கும் மனிதாபிமான உதவியாக அமையாது இப்பகுதிகளில் ஆயுதமயப்படுத்தப்பட்ட சிங்கள துணைப்படைகளை சிறீலங்கா ஏற்படுத்துவதற்கான செயலாகவே மாறும். யாழ்ப்பாண அரசாங்க அதிபர் புனர்வாழ்வுக்கு என அளிக்கப்படும் உதவிகள் இராணுவக் கட்டமைப்பை உறுதிப்படுத்த சிறீலங்காவால் பயன்படுத்தப்படுகிறது என வெளியிட்டுள்ள தகவல்களும் அநுராதபுரத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு பக்கெற்றுக்களில் அடைக்கப்பட்ட உணவுகளை வழங்க அனுமதிக்கும் சிறீலங்கா தமிழ்ப்பகுதிகளில் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு அருமைக்கூட வழங்க அனுமதிக்காது எந்த உணவுப் பொருட்கள் ஆனாலும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே வழங்கப்பட வேண்டுமெனக் காட்டிவரும் கெடுபிடிகளும் சிறீலங்காவின் மனிதாபிமானத்தின் தன்மைகளையும் இராணுவ நோக்குகளையும் தெளிவாக்கியுள்ளது. இந்நிலையில் புலம்பெயர் தமிழர்களாகிய நாம் வாழும் நாடுகளில் உள்ள ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் அளிக்கும் உதவிகள் எவ்விதம் சிறீலங்காவின் ஆக்கிரமிப்புக்கான ஆதரவாக மாறுகின்றது என எடுத்துரைக்க கடமைப்பட்டுள்ளோம். பிரித்தானிய அரசாங்கம் இனிமேல் கடனாக சிறு ஆயுதங்களை சிறீலங்கா பெறமுடியாது என அறிவித்துள்ளமை போல் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் சிறீலங்கா மேல் ஆயுதக் கொள்வனவுகளிலும் நிதியுதவிகளிலும் மீளாய்வுகளையும் கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டு இனஅழிப்பொன்றுக்கு தம்மை அறியாமலே இந்நாடுகள் உதவும் செயல்கள் மாறுவதற்கு நாம் வழிசெய்ய வேண்டும். சாரதாம்பாள் சிறீலங்காப் படையினரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு இனக்கொலைக்குள்ளாக்கப்பட்டு ஓலைப்பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்ட சம்பவத்தையும் அவரின் உடலைக் கண்ட அவரின் சின்னஞ்சிறு குழந்தை கத்திக்கொண்டு ஓடிய கொரூரத்தையும் உலகிற்கு எடுத்துச் சொல்லி உலகம் 2000ஆம் ஆண்டில் கால் வைக்கலாம் ஆனால் சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களை நரபலி கொடுக்கும் காட்டுமிராண்டி அரசியல் நடாத்திக் கொண்டிருக்கிறது என்பதை தெளிவாக்க வேண்டும். இந்த தமிழர்களை நரபலி கொள்ளும் அரசாங்கத்தை இந்த 2000ஆம் ஆண்டிலாவது தமிழீழ மக்களின் ஜனநாயக அரசாங்கம் என்று அங்கீகரிக்கும் கோமாளித்தனத்தை செய்ய வேண்டாமெனக் கேட்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

வணக்கம்
அன்புடன் ஆசிரியர்
(27.01.2000)

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

## மக்கள் பங்கேற்புடன்...

இக்கால கட்டத்தில் ஒவ்வொரு மொஸ்கோ வாசிகளும் தமது பிரதி பலிப்பை காட்டத்தொடங்கினார்கள். தங்கள் ஒவ்வோர் பகுதியினையும் யுத்தத்திற்கு தயார்ப்படுத்தினார்கள். அங்குள்ள குடிமக்கள் தாமாகவே நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை ஆயுததாரிகளாக மாற்றியும் டாங்கி அழிப்பு பிரிவுகளை உருவாக்கியும், தங்கள் நிரந்தரப்பகுதிகளை கைவிடா மல் வைத்திருக்க சுமார் ஒருலட்சம் பேர் வரையில் பயிற்சி பெற்றார்கள். மொஸ்கோ சண்டையின் போது அவர் கள் நிரந்தரப் படையுடன் சேர்ந்து கொண்டார்கள். மாதர்கள், இளம் பெண்கள் முற்றுமுழுதாக மருத்துவப் பொறுப்பை ஏற்று பதினேழாயிரம் பேர் கடமையாற்றினார்கள். இவர்கள் அனை வரும் தாங்களாகவே முன்வந்தார்கள். அந்த உக்கிரமான போர்ச்சூழலில் மக்கள் மண்டியிடாது தாமாக, அழைப்பிற்கு ஏற்ப முன்வந்து போரில் குதித்தனர்.

அப்போது மேற்கு (எல்) பிரண்டின் போர்க்குழுவால் வெளியிடப்பட்ட வேண்டுகோள்-

"ஆபத்தான நிலையில் உள்ள எமது நகரத்தை பாதுகாக்க வேண்டிய சூழலில் அதில் இருப்பவர்களின் வாழ்வு நாட்டிற்கே சொந்தமானது. இதில் ஒவ்வொருவரின் உறுதியை, வலி மையை, துணிவை நாடு எதிர் பார்க்கின்றது."

இதற்கேற்பவே அனைவரும் போரில் குதித்து ரஷ்ய தலைநகரத்தை நாசிப் படைகளிடம் இருந்து காப்பாற்றினார்கள். இந்த முற்றுகை உடைப்புச் சமர்களே ரஷ்ய மக்களின் வாழ்வில் ஒளியை ஏற்படுத்தியது. எனவே முற்றுகைச் சமர்களும், முற்றுகை உடைப்புச் சமர்களும் போரின் முடிவுக்கு காரண மாகி அதில் வெற்றிகளையும் சூட்டி இருப்பது ஒரு புறம் இருக்க, அந்த வெற்றி மக்களின் முழுமையான பங்களிப்பினாலேயே ஏற்பட்டது என்பதே வரலாறு. எமது தாயகத்தைப் பொறுத் தவரை அதன் தலைநகரங்கள் எதிரியின் ஆக்கிரமிப்பில் உள்ள போதும் வன்னி போர்க்களம் எமது போராட்டத்தின் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறி வருகின்றது. காரணம் அதுவே எமது போராட்டத்தின் இறுதித் தளமாக விளங்குவதனால் ஆகும். எனவே இந்தப் பிரதேசத்தையும் எதிரி மிக இறுக்கமாக முற்றுகையிட்டு கொண்டிருக்கும் வேளை அதனை எதிர்த்து ஓர் முற்றுகை உடைப்புச் சமரினை செய்ய வேண்டிய வரலாற்றுத் திருப்பு முனையில் நாம் உள்ளோம். அத்துடன் அந்தச் சமர் வன்னியில் வாழ்கின்ற ஒவ்வொரு பொதுமகனின் கைகளிலும் அந்தப் பொறுப்பு உள்ளது. இவ்வாறுதான் தமது தேச விடுதலைக்காக 5000 மைல்கள் நடந்து சென்று இருபது மாநிலங் களையும் பதின்மூன்று ஆறு களையும் கடந்து பல லட்சம் மக்கள் படையுடன் பெரும் பயணம் ஒன்றை மேற்கொண்டார் *சீனத்தலைவர்* மாஓ சேதுங். இந்தப் பயணமே நவசீன மலர்விற்கு காரணமாக அமைந்தது. எதிரி துரத்தி சென்றதால் தனது படைகளுடன் தப்பியோடிய அதாவது மிக நீளமான தூரத்தை கால்நடையாக கடந்த ஓர் போராட்டம் என்றால் அது *சீனாவின்* செஞ்சேனைதான். எனினும் மனந்தளராது உறுதி குலையாது தலைவரும் அதன் வழி *சீன* மக்களும் தாம் விட்டுச் சென்ற இடத்தை அடைவதற் காகப் போராட்டத்தை அங்கிருந்தே ஆரம்பித்தார்கள். அப்போது 1945 காலப்பகுதியில் *சீனச்* செஞ்சேனைக்கு எதிரான அடக்குமுறையில் சியாங்கே சேக்கின் படை எண்ணிக்கை 43 லட்சம் ஆகும். மாவோவின் படை 12லட்சம். ஆனால் செஞ்சேனை வசம் 13கோடி மக்கள் இருந்ததனால் படைகளை திரட்டும் வாய்ப்பு ஏற்பட்டது. யுத்தம் வெடித்ததும் சியாங்கே சேக்கின் படை 07 லட்சமாக குறைய மாவோவின் படை 08 லட்சமாக அதிகரித்தது. இதற்குக் காரணம் இறுதிச்சமர் ஒன்றிற்காய் மக்கள் தம்மை பெருமளவு அர்ப் பணித்ததே ஆகும். திட்டமிட்ட படையுடன் மாவோ, சியாங்கே சேக்கிற்கு எதிராகப் போரிடுகையில் நிலங்கள் விடுவிக்கப்பட்டன. மக்களிற்கு நிம் மதியும் கிடைத்தது.

இங்கு குறிப்பிடுவது என்னவெனில், மக்களின் மனவுறுதியும் தலைமைப் பற்றும் தேசப்பற்றுமே ஆகும். எவ்வாறு ரஷ்ய மக்கள் மொஸ்கோ, ஸ்டாலின் கிராட், லெனின் கிராட் நகரங்களை முற்றுகையில் இருந்து காப்பாற்றினார் களோ, *சீனமக்கள்* தமது தாயகத்தை காப்பாற்றினார்களோ அவ்வாறே வன்னி யில் வாழ்கின்ற அனைவரும் அதில் பங்குபற்ற வேண்டிய சூழலை எதிரி ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றான். இந்த வகையில் வியட்னாம் தலைவர் ஹோ-சி மின், ரஷ்ய செஞ்சேனைத் தலைவர் ஸ்டாலின், *சீனச்*செஞ்சேனைத் தலைவர் மாவோ ஆகியோர் போல் எமது தலைவரும் எதிரியின் இறுதி முற்றுகையை எதிர்க்கவும் உடைக்கவும் அழைப்பு விடும் நேரம் அனைவரும் இதில் பங்கு பற்ற தயாராக இருப்போம். ■

# இரவேறிய நிலவூடாக கரையேறிய உறவுகளுக்கு

ஆலமரத்தின் கீழ் அரை நாண் கயிறு தொய்யக்
காலால் நடந்தெனது
கடப்படிக்குப் போவதற்கும்
ஏலாதிருக்குமொரு இடம் பெயர்ந்த தமிழ்க்கவிஞன்
வாயாலெடுத்தோதும்
“வன்னிக்கதை” கேட்டு
தேயா நிலவே! நீ செப்புவையோ வையமெங்கும்.
எத்தனை பேர் தன்னை இரந்தோம்
ஒருவருமே
சத்தியமாயெம்மைத் தலையெடுத்தும் பார்க்கவில்லை.
செத்திடுவார்
எமக்கேனிச் சோலி எனநினைத்தா
விட்டார்
எனினும் யாம் விழமாட்டோம் எனச்சொல்வாய்.
நாளாந்தம் நோயால் நலிந்தும்,
ஒருகவளம்
ஆகாரமின்றி அயர்ந்தும்,
கூவிவரும்
குண்டால் உயிர்க்கூடு குலைந்தும்
பொல்லாத
சண்டைக்குள் வாழும் சனத்தை எவர்நினைத்தார்?
வாழ்வைத் தொலைத்தும், வாழ்விடத்தின் வேரறுத்தும்
பாழ் விதிக்குத்தம்மைப் பறிகொடுத்தும்
ஆகாயப்
பந்தலதின் கீழ் வாழும் பாவியரை யார் நினைத்தார்?
சொந்தம் பிரிந்த துயர்வாட்ட
நெஞ்சறைக்குள்
ஊர்நினைவு வந்து உலைமூட்ட
ஒருகாலம்
“சீர்பூத்த” குடியென்னத் திகழ்ந்த குலவேர்கள்
நீர்கூடக் குடித்தாற நிலகுழியுமில்லாமல்
போர்தூரத்த ஓடிப்புழுவானார்,
கால் மிதிக்கும்
புல்லானார்,
யாரும் பேசாத பெர்குளானார்
கல்லானார்
நாளை கால்வைத்தெம் வீதியிலே
வில்லாளும் வீரம்விரித்த மலரடிகள்
பட்டு; உயிர்த்தெழும் நப்பாசையிலே
இன்னுமுயிர்க்
கொட்டுத்துடிக்கக் கிடப்பதையிங் காரறிவார்?
வந்த விருந்தோம்பி
வருவிருந்தையெதிர் பார்த்துச்
சந்தை முழுதும் தன் தலைவாசல் பரப்பியதோர்
குடியின் கொடியிங்கு கொழுகொம்பு ஏதுமின்றிப்
பிடியரிசிக்காகப் பிறப்பெடுத்த குடியாச்சு,
காலைப்பொழுது கண்திறக்க
கன்றின் வாய்
பாலை உறுஞ்சும்,
பனிமலர்கள் சிலிர்த்தகொடி
ஆளை மயக்கும்,
ஆறுமுகன் பூசைமணி
வாசல் புகுந்து வந்து வளைத்தெம்மை முத்தமிடும்,
நாதஸ்வரமிங்கே நானுமுளேன் என்பது போல்
வீசும் காற்றிழைந்து விடிபொழுதிற் சத்தமிடும்.
பொன்தாதுப் பொடியென்னப்
பொலிந்த பெருஞ்சோதி
இன்றோ விடிந்தென்ன
இருளாகிப் போயென்ன
என்றான வாழ்வில் இடியுண்டு கிடக்கிறதே.
இருள் தூரத்த வந்திங்கு இருக்கின்றோம்
முன்னிருந்த
பெருமையெலாம் தெருவிற் போட்டு
வழி நடந்து
வறுமையிலே விடி வதங்கிடினும்
கூர்முனையை
வணங்காதோரென்ற வரலாறெமக்கிருக்கும்.
பணமும் பொருளுமென்ன பண்ணும்?
எலை நிமிர்ந்து
சாவு விளைகின்ற தரையினிலே வேர் கொண்டோம்
மாவு
மருந்துடனே மண்ணினை
எனயிங்கு
ஏதுமிலையென்றாலும் இருக்கின்றோம்
சாகவில்லை.
நீதியொரு நாளெம்மை நிமிர்த்தும்
அதுவரையும்
அணையாதிருப்பதற்கே அரும்பாடுபடுகின்றோம்
துணையாய் எமக்கெவர்தான் தோள்தருவார்?
நிலவே நீ
போகும் திசையெங்கும் பேசு
நாங்களிங்கு
வேகும் நெருப்பிடையே வெந்துள்ளோமெனச்
சொல்லு.
கோடியுறவிருந்தும் கேட்கவொரு நாதியற்று
ஆடிச்சரியுமெங்கள் அந்தரிப்பைச் சொல்லிடுக.
“வன்னிக்கதை” கேட்டு வழியும் விழி கண்டால்
அன்னார் முகவரியை அறிந்து வா
அது போதும்.
காசெமக்குவேண்டாம் கருகுமெம் வாழ்வுதனைப்
பேச ஒருவர் புறப்பட்டால் அது போதும்
வானத்தெழுந்து வரும் வண்ணநிலவே!
நீயிங்கு
காணும் துயரையெல்லாம் கட்டாயம்
போயுரைப்பாய்.
காத்திருப்போம்.
எங்கள் கதைகேட்டால்
உறவென்பவர்
நாற்திசையுமிருந்து நகர்ந்து வரும்
சொல்வாயா?

**புதுவை இரத்தினதுரை**

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# தொடரும் அவலங்களும் சமாதான "பொதிகளும்"

சந்திரிகா அரசின் தீர்வுப் பொதிக்கு அதிருப்திகளுடன் கூடிய ஆதரவை தரப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். இதனை அரசியல் தந்திரோபயம் என சிலரும் தப்பிப் பிழைக்கும் முயற்சி எனச் சிலரும் விமர்சிக்கின்றனர். ஆனால் அவரது அறிவிப்பினை தொடர்ந்து நீண்டகாலமாக மூலையில் கிடந்த தீர்வுப் பொதி மீள தூசி தட்டப்பட்டுள்ளது.

நோர்வே மற்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சுக்களின் உயரதிகாரிகள் கொழும்பில் பேச்சுக்கள் நடாத்தி வருவதாக செய்தி ஊடகங்கள் கூறுகின்றன. அடுத்த மாதம் கொழும்பில் சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இடம் பெறவுள்ளது என்ற அறிவிப்பும் இச் சர்வதேச நடமாட்டத்தை சத்தம் மிக்கதாக்கியுள்ளது. தமிழ் - சிங்கள தேசங்களுக்கு இடையேயான இனச்சிக்கலை தீர்ப்பதற்கானதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என ஒரு அபிப்பிராயம் எழுப்பப்படுகின்றது.

ஆனால், மறுபுறம் இராணுவ தளபாடக் கொள்வனவுக்கான புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. புதிதாக 15 000 பேரை படையில் இணைக்க உள்ளதாக சிங்கள தரைப்படைத் தளபதிகள் கூறுகின்றனர். சந்திரிகாவின் விசுவாசத்திற்குரிய தரைப்படைத் தளபதி லெப்.ஜெனரல் சிறீலால் வீரசூரியா இராணுவத் தீர்வே ஒரே வழி என அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றார். சிங்கள இனவாத அமைப்பான பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் மாநாடு நடத்தி இங்கு இனப்போர் ஒன்றும் இடம் பெறவில்லை வெறுமனே பயங்கரவாதத்திற்கு எதிராக சிங்களவர்கள் போராடுகின்றனர் என பிரகடனம் செய்கின்றது.

கொழும்பில் இடம்பெறும் தொடர்ச்சியான கைதுகளும், களுத்துறை சிறைச்சாலைப் படுகொலைகளும், தென்தமிழீழ மக்களை வெளியே நடமாட முடியாதவாறு கட்டிப்போடுவதற்கான



புதிய பாஸ் திட்டங்களும் தமிழ் மக்களின் மீது இன அடக்குமுறையையும் படுகொலைகளையும் புரியும் சிங்கள பேரினவாத திட்டங்களை அப்பட்டமாக வெளிக்காட்டியுள்ளது.

தமிழ்-சிங்கள தேசியங்களுக்கு இடையேயான இனமோதலை தீர்ப்பதற்கு ஏற்புடைய சூழ்நிலைகள் பற்றி எமது தேசியத் தலைவர் தெளிவாக வலியுறுத்தியுள்ளார். இராணுவ வழிமுறைகளை முற்றாகக் கைவிட்டு மக்களை சகஜ நிலையில் வாழ அனுமதிப்பது இப் பேச்சுக்கள் மூலமான இணக்க முயற்சிக்கு அவசியமான தேவை என்பதை தேசியத் தலைவரின் உரையும் எமது விடுதலை இயக்கத்தின் செய்திகளும் தெளிவாக எடுத்தியம்பியுள்ளன.

ஓயாத அலைகள் கொடுத்த இராணுவ - அரசியல் நெருக்கடிகளிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கான இடைக்கால ஏற்பாடாக பேச்சுக்கள் மற்றும் தீர்வுப் பொதி என்பனவற்றைப் பயன்படுத்தும் உள்நோக்கம் சந்திரிகாவின் கபடத்தனமான அறிவிப்புக்களில் தெளிவாக தெரிகின்றன. ஒன்றிற்கு ஒன்று முரண்பட்ட முறையில் இனக்குரோத எச்சரிக்கைகளையும் பேச்சுக்கள் பற்றிய அறிவிப்புக்களையும் வெளியிடுவது சந்திரிகாவின் உள்நோக்கை தெளிவுபடுத்துகின்றது.

போரிற்கான ஆயுத்தங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. தமிழ் மக்கள் மீதான கொடூரங்கள் தீவிரப்படுத்தப்படுகின்றது. புதிய புதிய அறிவிப்புக்கள் மூலம் எம்மக்களின் இயல்புவாழ்வு மேலும் சிதைக்கப்படுகின்றது. இவற்றிற்கு மத்தியில் ஒரு உண்மையான பேச்சுக்கள் இடம்பெற முடியாது. எமது தேசியத் தலைவர் கூறியது போல், சமாதான பேச்சுக்களுக்கான ஒரு புறச்சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும். போர் நெருக்கடி நீங்கிய நிலையில், இராணுவ ஆக்கிரமிப்பும், பொருளாதார நெருக்குவாரங்களும் அகன்ற இயல்பான, நல்லெண்ண சூழ்நிலையிலேயே பேச்சுக்கள் நடைபெற வேண்டும். ■

# நமது தலைவிதியை நாமே நிர்ணயிப்போம்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஓயாத அலைகள் 3இன் வெற்றி எழுச்சியுடன் ஆரம்பமாகியுள்ள புதிய நூற்றாண்டு கடந்த நூற்றாண்டில் தமிழர்க்கு உற்ற வீழ்ச்சிகளை, இன அழிப்புக்களை மாற்றியமைக்கின்ற விடுதலைக் காலமாக நிச்சயம் திகழும்.

1591இல் நல்லூர் உடன்படிக்கை என்ற பெயரில் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண அரசின் அன்றைய மன்னனான எதிர்மன்னசிங்ககுமாரனுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தமே தமிழர்களின் தனியரசான தமிழீழத் தாயகத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. எதிர்மன்னசிங்ககுமாரன் போர்த்துக்கேயரின் ஆதரவில் அரசனாகிய மன்னன் என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்றுமுதல் இன்றுவரை அன்னியர்களின் ஆதரவுடன் எங்கள் தமிழீழத் தாயகத்தின் அரசியல் உரிமைகளை நெறிப்படுத்த முயற்சித்த அனைவரும் செய்த அனைத்து ஒப்பந்தங்களும் எமது அழிவின் ஒப்பந்தங்களாகவே அமைந்தமை எமது வரலாற்று அனுபவங்கள். இதற்குக் காரணம் எதிர்மன்னசிங்ககுமாரன் காலம்வரை தமிழ்மக்கள் தமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக எந்த ஒடுக்குமுறையையும் அடக்குமுறையையும் போராடி வெல்லும் மனோபாவம் உடையவர்களாக வரலாற்றில் காணப்பட்டனர். ஆனால் என்று எங்கள் பிரச்சனைகள் மற்றவர்களால் தீர்த்து வைக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டதோ அன்றே எமது தலை விதியை மற்றவர்கள் நிர்ணயித்தனர்.

நாம் அரை நூற்றாண்டு காலமாக ஒற்றை ஆட்சிப் பாராளுமன்ற அமைப்புக்குள் பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் மூலம் தாம் இழந்தவைகளை மீளப் பெறலாம் என்ற நோக்கில் செயற்பட்டோம்.

எமது சமூக பொருளாதார வாழ்வை நாம் நிலை நாட்டும்போது வேறு எவரிலும் தங்கியிராத பொருளாதார வாழ்வை எமக்கென உருவாக்க வேண்டியது எமது கடமையாகின்றது. எமது தேசவளங்களைக் கொண்டு தன்னிறைவான உற்பத்தியை உருவாக்குவது அத்தியாவசியமாகிறது. ஒவ்வொரு தமிழ் பிரசையும் தனது உழைப்பையும், சேமிப்பையும் மூலதனமாக தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வழங்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாகின்றனர். இதில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழீழப் பிரசைகளின் பங்கு முக்கியமானதும் இன்றியமையாததுமாகும். ஏற்கனவே தமிழீழத்தில் உருவாக்கப்பட்டுள்ள சமூக பொருளாதார அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதும் அதன் வளர்ச்சிக்காக மேலும் மேலும் உழைப்பது ஒவ்வொருவரினதும் வரலாற்று கடமையாகின்றது.

எமது அடிப்படை உரிமைகளை மறுத்ததன் மூலம் உரிமைகளுக்கான எமது ஜனநாயக போராட்டங்களை நிராகரித்தது மட்டுமல்லாது கடந்த கால் நூற்றாண்டின் ஆயுத வன்முறையை திணித்ததன்மூலம் நாம் ஆயுதம்தாங்கி போராடவேண்டிய நிர்ப்பந்தத்தை எமக்கு அளித்தது சிங்களமக்களின் அரசே. அடக்குமுறையாளர்கள் வென்றதாக வரலாறே இல்லை. தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறையை அதிகரித்ததன் மூலம் தமிழ் மக்கள் மீதான தனது வெறுப்புணர்வை வெளிப்படையாக காட்டிக்கொள்கின்றது. அரை நூற்றாண்டு காலமாக சிங்களவர்கள் தம்முடைய சனநாயக உரிமைகளின் மூலம் தமது தேவை கருதி அரசுகளை மாற்றிக் கொண்டோரேயொழிய தமிழ் மக்கள் மீதான கொள்கைகளில் மாற்றம் எதையும் ஏற்படுத்தவில்லை. தமிழீழ மக்கள் மீதான அடக்குமுறையும், கொடூரத்தையும், இனத்துவேசத்தையும்தான் அதிகரித்தனர் என்பது வரலாறாக இருக்கிறது.

இந்த நிலையில் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் எவ்வாறு சேர்ந்து வாழமுடியும் இந்த வெறுப்புணர்வு ஓர் குறுகியகால செயற்பாடல்ல இரண்டு தலைமுறையையும் கடந்துவிட்ட மூன்றாவது, நான்காவது, தலைமுறைகளுமே வெளிப்படையாக எதிரிகளாக மோதிக்கொள்ளும் நிலை. எதிரிகளாக ஒருசாரார் மற்றொருசாராரை அடக்கிக்கொண்டு, எவ்வாறு சேர்ந்து வாழமுடியும் எதிரிகளாக சேர்ந்து வாழ்வதைவிட, நண்பர்களாக பிரிந்து செல்வதே மேல் ஆனால் நண்பர்களாக பிரிந்து செல்லவும் சிங்களம் தயாராக இல்லை. இந்த நிலையில் நாமாக பிரிந்து செல்வதே மேல். நாமாக பிரிந்து செல்வது என்பது சிங்களவர்களின் இராணுவ ஆதிக்கத்தை எம்மிடமிருந்து பிரித்துவிடுவதேயாகும். ஆகவே சிங்கள இராணுவத்தை தமிழீழப் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றிவிட்டு எமது சமூக பொருளாதார வாழ்வை நாமே நிர்ணயிப்பது ஆகும். தமிழீழப் பிரதேசத்தில் இருந்து தனது இராணுவ நிர்வாக ஆதிக்கத்தை இழக்கும்போது சிங்கள தேசம் தமிழீழ தேசத்தின்மீதும் மக்கள்மீதும்தான் உரிமைகோரும் இறைமை இழந்து விடுகின்றது. இந்த நிலையில் தமிழீழ மக்கள் பல நூற்றாண்டுகளாக அந்நியர்களிடம் இழந்துவிட்ட இறைமையை மீண்டும் உலகிற்கு தன்னுடையதாக அறிவிக்கின்ற நிலையே தமிழீழ தோற்றமாகும்.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCC<br>Postfach 101613,<br>46016 Oberhaousen. | ITALY<br>TCC<br>Via Vinsenzo Di Pavia No14,<br>90138 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

# விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியேற்றம்

ஓயாத அலைகள் 3 நடவடிக்கையினால் விடுவிக்கப்பட்ட பிராந்தியங்களில் மக்கள் மீளக்குடியேற ஆரம்பித்துள்ளனர். பல்லாயிரம் மக்கள் தமது சொந்த வதிவிடங்கள் அமைந்திருந்த மாங்குளம், ஒலுமடு, கருப்பட்டமுறிப்பு பகுதிகளிற்கு மீளச் செல்லத் தொடங்கியுள்ளனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் முரசுமோட்டை, ஊரியான், பரந்தன் கிழக்கு, மற்றும் கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் மக்கள் மீள திரும்புவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

வன்னிப் பகுதியில் 1996 - 1997ம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற பல்வேறு இராணுவ நடவடிக்கைகளால் தமது வாழ்விடங்களை விட்டு விரட்டப்பட்ட மக்கள் ஓயாத அலைகள் நடவடிக்கையால் மீள தமது வாழ்விடங்களுக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

# பிரித்தானியாவின் ஆயுதக்கடன் மறுப்பு !

சிறீலங்காவுக்கு கடன் அடிப்படையில் ஆயுதம் வாங்குவதற்கான உத்தரவாதத்தை வழங்க பிரித்தானியா மறுத்துள்ளது. இதற்கான அறிவிப்பை பிரித்தானியாவின் நிதி அமைச்சர் கோடன் புறவுன் அவர்கள் விடுத்துள்ளார். 63 நாடுகளுக்கு ஆயுத ஏற்றுமதி உத்தரவாதத்தை மறுத்துள்ள பிரித்தானிய அரசு இந் நாடுகளில் நிலவும் பொருளாதார கடினங்கள் காரணமாகவே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. சிறீலங்கா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் இப்பட்டியலில் அடங்கியுள்ளன.

இவ்வாறு கடன் உத்தரவாதம் மறுக்கப்பட்ட நாடுகளில் சிறீலங்காவே பிரித்தானியாவிலிருந்து பெருமளவில் ஆயுதக் கொள்வனவை பெறும் நாடு என பிரித்தானியாவின் ஆயுதவிற்பனைக்கு எதிரான பொது அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந் நடவடிக்கையால் சீற்றமடைந்த சிங்கள பேரினவாதிகளும் அவர்களது ஊடகங்களும் கொழும்பில் பிரித்தானியாவை கடுமையாக விமர்சித்தன. புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாடு இதுவென "தி ஐலன்ட்" எனும் ஏடு ஆசிரியர் கருத்துரை எழுதியது. இதனை மறுத்துள்ள பிரித்தானிய தூதுவர், சிறீலங்கா அரசு பிரித்தானியாவிடம் இருந்து கடந்த காலங்களில் கவச வாகனங்கள், விமானங்கள் உட்பட பல ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்தது என்பதை ஒப்புக்கொண்டார். ஆனாலும் வறுமையை இல்லாதொழிக்கவே தமது அரசு ஆயுதக்கடன் உத்தரவாதத்தை வழங்க மறுக்கின்றது எனப் பதிலளித்துள்ளார்.

# *புலிகளை தடை செய்வது பிழையானது!*

**– பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ஜெர்மி கோபன்–**

நான் நீண்ட காலம் அரசியலிலும் பாராளுமன்றத்திலும் இருந்துள்ளேன். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அமைப்பு பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்தது நினைவில் உள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்கமும் பிற அமைப்புக்களும் அப்பட்டியலில் இருந்து பின் நீக்கப்பட்டு உயர்ந்து நின்றன. நீங்கள் சமாதானம் காண விழைகின்றீர்கள் என்றால் நீங்கள் குறிப்பிட்ட அமைப்பின் வழிமுறைகளை அல்லது நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்கின்றீர்கள் என்று பொருளல்ல. நீங்கள் அவர்களுடன் கதைக்க வேண்டும் அல்லது அங்கு சமாதானம் ஏற்படாது என பிரித்தானிய ஆளும் தொழில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜெர்மி கோர்பன் கூறியுள்ளார். புலிகளை தடை செய்வது பிழையான நடவடிக்கை எனக் கூறிய அவர் புலிகள் மூன்றாம் தரப்பு பேச்சுக்களை ஏற்க தெளிவாக தயாராக உள்ளனர் ஆனால் சிறீலங்கா அப்படியில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

# இன அடிப்படையில் வதை

**- அமெரிக்காவின் ஏசியா வாச் அறிக்கை -**

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தமிழ் மக்கள் இன அடிப்படையில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்ட ஏசியா வாச் எனும் மனித உரிமைகள் நிறுவனம் தனது 1999ஆம் ஆண்டுக்கான பொது அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது. வீதிச் சோதனைகளின் போது வழமையான சித்திரவதைகள், சட்டவிரோத தடுப்பு, கொலை, கட்டாய வேலைவாங்கல் என்பன தமிழ் மக்களுக்கு எதிராக புரியப்படும் குற்றங்கள் ஆகும் என தெரிவித்த அவ்வறிக்கை தமிழ் குழுக்களையும் ஊர்காவல் படைகளையும் தம்மோடு இணைத்துக் கொண்டு அரச படைகள் வதைகளில் ஈடுபடுவதை சுட்டிக் காட்டியுள்ளது.

# மற்றுமொரு இராணுவ ஆட்சேர்ப்பு

எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதி முதல் 15000 இராணுவத்தினரை படையில் சேர்ப்பதற்கான திட்டம் ஆரம்பமாக உள்ளதாக சிறீலங்கா இராணுவம் அறிவித்துள்ளது. இவர்கள் அறிவிக்கப்படாத இடமொன்றில் பயிற்றுவிக்கப்பட்டு போர் இடம்பெறும் இடங்களுக்கு அனுப்பப்படுவார்கள் என இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார். இந் நோக்கத்திற்கு பரப்புரை செய்வதற்காக கொழும்பில் இருந்து செய்தியாளர்கள் ஆனையிறவு போர்முனை மற்றும் இடங்களுக்கு இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அங்கு தாம்நாட்டுப் பற்றுப் பற்றி தளபதிகள் செய்தியாளர்களுக்கு உரையாற்றினர்.

# கொழும்பில் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கைது !

**- கொழும்பில் இரகசிய படுகொலைகள் இடம்பெறலாம்? -**

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் சிங்கள முப்படைகளாலும் சுற்றிவளைக்கப்பட்டு கைதுசெய்யப்படுகின்றனர். திடீரென பிறப்பிக்கப்படும் ஊரடங்கு உத்தரவின் பின் தமிழர்கள் வாழும் இடங்களை சுற்றிவளைக்கும் பொலிஸார், அவர்கள் ஏன் கொழும்பில் உள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களுடன் சொல்லுமாறு பணிக்கப்படுகின்றனர். இதன்போது பல்லாயிரம் மக்களை திருப்தியான காரணங்கள் சொல்லாதவர்கள் என கைதுசெய்யும் படையினர் அவர்களை குறிப்பிட்ட பொலிஸ் நிலையங்களுக்கு இழுத்துச் சென்று அங்கு தமது உளவாளிகள் மற்றும் தகவல் தருவோர் முன்நிறுத்தி விசாரித்து வருகின்றனர். இக்கைதுகள் பல்லாயிரக்கணக்கில் இடம்பெறுவதால் உண்மையில் கைது செய்யப்பட்டோர் மற்றும் தடுத்து வைக்கப்பட்டோர் பற்றிய விபரங்கள் சரியாக அறியப்பட முடியாது. மேலும் கைதாகும் தமிழர்கள் குறிப்பிடப்படாத இடங்களுக்கு அனுப்பப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றனர். சிங்களப்படைகள் இவ் உத்திகள் மூலம் பல தமிழர்களை கணிப்பிட முடியாதவாறு கைதுசெய்து சந்தேகமான சிலரை இரகசியமாக கொலை செய்ய முயலலாம் என அஞ்சப்படுகின்றது.

தமது இவ் இனவாரியான நடவடிக்கைக்கு காரணம் காட்டுவதற்காக சில புலிகள் கைதுசெய்யப்பட்டு வருவதாக அரசு விளக்கம் கொடுத்துள்ளது.

சந்திரிகா தனது பதவியேற்பு உரையில் தமிழர்கள் மீதான எச்சரிக்கையை விடுத்தது தெரிந்ததே.

# லெப்.ஜெனரல் வீரசூரியாவுக்கு சிங்கள இனவாதிகள் பாராட்டு

சிங்கள இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிறீலால் வீரசூரியாவுக்கு சிங்கள இனவாத அமைப்பான சிங்கள வீரவிதான பாராட்டு தெரிவித்துள்ளது. புலிகளை இராணுவ வழிமுறைகளால் அடக்க வேண்டும் எனவும் வன்னித் தோல்விகள் தற்காலிகமானது எனவும் வீரசூரிய அண்மையில் இடம்பெற்ற புத்தாயிரம் ஆண்டு நிகழ்வொன்றில் உரையாற்றிய போது கூறியிருந்தார்.

இது தொடர்பாக வீரசூரியாவுக்கு கடிதம் எழுதியுள்ள வீரவிதான அமைப்பினர் பிரபாகரன் அண்மையில் தனது காட்டு வதிவிடத்திலிருந்து சிங்கள தேர்தல்களை நடாத்தியதாகவும் ஆனால் இராணுவத்தினரை புறக்கணித்துவிட்டு இரு அரசியல் கட்சிகளும் மூன்றாம் தரப்புப் பற்றி பேசினர் என தெரிவித்துள்ளனர்.

வீரவிதான அமைப்பினர் சிங்களப் பகுதிகளில் உள்ள தமிழ் வணிகர்களுக்கு எதிராக தீவிரமாக செயற்படுகின்றனர்.

# இனப் போராட்டம் ஒன்றுமில்லை!

*– சிங்களப் பயங்கரவாதிகள் கூக்குரல் –*

சிங்கள இனவாத அமைப்புக்களின் கூட்டமைப்பான பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம் சிங்களவர்களுக்கான பொதுப்பிரகடனம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் தற்போது இடம்பெறும் இராணுவ முரண்பாடு இனமுரண்பாடு அல்ல எனவும் உலக நாடுகள் இதனை உணர்ந்து பயங்கரவாதத்தை ஒழிக்க உதவ வேண்டும் எனவும் கோரியுள்ளன.

இவ் அமைப்பின் மாநாடு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது. 16 நாடுகளில் இருந்து சிங்களப் பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டனர் என அறிவிக்கப்படுகின்றது.

தமிழர்களின் சுட்டான சர்வதேச எழுச்சியை பயங்கரவாதமாக கருதுமாறு இவ் இனவாத அமைப்புக்கள் நீண்டகாலமாக கோரி வருகின்றன.

# பனாகொடவிலிருந்து தப்பி ஓட்டம்

சிங்கள இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களை மீளக் கைது செய்து அடைத்து வைத்திருக்கும் பனாகொட இராணுவ முகாமிலிருந்து 17கைதிகள் (முன்னாள் இராணுவத்தினர்) தப்பி ஓடிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது ஆட்பல பற்றாக்குறையைப் போக்க இராணுவத்தை விட்டு தப்பியோடும் இராணுவத்தினரை பலாத்காரமாக சிறீலங்கா இராணுவம் போர்முனைக்கு அனுப்பி வருகின்றது. அதற்கு ஒத்துழைக்க மறுக்கும் படையினரை கைது செய்து பனாகொட தடுப்பு முகாமில் அடைத்து வைத்துள்ளது. அவர்களில் 17 பேர் இரவு உணவுக்காக சிறைக்கூடக் கதவுகள் திறந்தபோது காவலாளர்களை தாக்கிவிட்டு தப்பியோடிவிட்டனர்.

உலகில் தப்பியோடியவர்களை நம்பியுள்ள இராணுவமாக சிங்கள இராணுவம் உள்ளது என இந்திய ஏடொன்று வர்ணித்துள்ளது.

# கோபி அனானிடம் வன்னி மீண்டும் மனு

வன்னிக்கான உணவு விநியோகத்தை மேற்கொள்ளுமாறு கோரி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திடம் வன்னி பிரஜைகள் குழு வேண்டுதல் விடுத்துள்ளது.

வன்னிக்கான உணவு விநியோகத்தை சிங்கள இராணுவம் பல தடவை இடைநிறுத்தி கட்டுப்படுத்தி வருவதை சுட்டிக்காட்டிய வன்னி பிரஜைகள் குழு தினசரி ஒருவேளை உணவுடன்தான் பல குடும்பங்கள் வாழ்வதாக சுட்டிக்காட்டியுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் ஏராளமாக வாழ்வதால் உணவு நிவாரணப் பணிகள் மிக அவசியமானதாக உள்ளது. ஆனால் கட்டுப்பாடுகளால் சிப்பங்கள் வெறுமையாக உள்ளன. வைத்தியசாலைகளினதும் நிலைமைகள் மோசமாக உள்ளன. இந்நிலையைப் போக்க உடனடியான உணவு மற்றும் மருத்துவ விநியோகத்தை வன்னிக்கு மேற்கொள்ள வேண்டும் என அக்குழுவினர் ஐ.நா செயலாளர் நாயகத்தை கோரியுள்ளனர்.

# தமிழீழ கல்விச்சூழலை சீர்குலைக்கும் சிறீலங்கா அரச பயங்கரவாதம்

கடந்தவாரம் இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் செயலாளர் மகாசிவம் அவர்கள் சிறீலங்கா கல்வித்திணைக்கள உயரதிகாரியை மாற்றும்படி கோரியிருந்தார். தமிழ் பாடநூல்களில் காணப்படும் இலக்கண இலக்கிய பிழைகளும் வரலாற்று திரிவுகளும் தொடர்ச்சியாக காணப்படுவதாவது, இது வெறும் அச்சகத் தவறுகளோ, எழுத்து பிழைகளோ அல்ல எனக்குறிப்பிட்டிருந்தது. இதுபௌத்த சிங்கள அரசு தமிழ்த் தேசிய இனத்தின் மீது காலங்காலமாக செய்துவரும் இனஅழிப்பு செயற்பாடுகளில் ஒன்று.

ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தை அழிப்பதற்கு முதலில் அந்த இனம் தனது தனித்துவத்தை இழக்கவேண்டும் என்பதற்கமைய, சிறீலங்கா பேரினவாதம் இப்போதைய சந்திரிகா அம்மையாரின் தந்தையார் பண்டாரநாயக்க என்ற சிங்களவர் 1950 களின் இறுதியில் தனிச் சிங்களச்சட்டத்தை கொண்டு வந்து தமிழ் மொழி அழிப்புக் கொள்கைக்கு வித்திட்டார். அன்றிலிருந்து பல்வேறு வழிகளில் தமிழை இல்லாமற் செய்வதற்கு அரச இயந்திரம் முழுமூச்சாக வேலை செய்து வருகிறது. சிங்கள உச்சரிப்பில் தமிழை எழுதுவது, அரசவேலைகளில் சிங்கள மொழியை கட்டாயத் தகுதியாக அமுல்ப் படுத்தியது முதல் தமிழர் செறிந்து வாழும் இடங்களில் உள்ள பள்ளிகளில் தமிழ் தெரியாத ஆசிரியர்களை நியமனம் செய்தல், இவ்வாறு பல்வேறு வடிவங்களில் சிறீலங்கா அரசு செயற்பட்டு வருகிறது.

மொழிக்கொள்கையில் தீவிரமாய் மறைமுகயுக்திகளை சிங்கள அரசு தேசிய தமிழ் இனத்தின்மீது தீர்க்கமாய் தீவிரமாய் அமுல்ப்படுத்துவது யாவரும் அறிந்ததே .

கடந்த ஆண்டு (UNICEF) ஐ.நாவிற்கான சிறுவர் நிதியத்தின் சிறீலங்கா மீதான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது யாதெனில் தமிழீழ பிரதேசமெங்கும் 900000 மாணவர்கள் உள்ளனர். அதில் 300000 மாணவச் சிறுவர்கள் அதாவது தமிழீழ எதிர்காலச் சந்ததியினர் வன்னியில் இடம் பெயர்ந்தோராக உள்ளனர். தாய் நாட்டிலேயே தாய் நிலத்து மக்கள் இடம்பெயர்ந்து வாழும் (IDB) அவலத்தினால் தமிழீழ எதிர்காலச் சந்ததியினில் 1/3 பங்கினர் கல்வியறிவற்றவர்களாக உருவாகும் அவலம் உள்ளதாக அபாயம் நிறைந்த துக்ககரமான தரவு ஒன்று காட்டியுள்ளது.

1970 களில் ஆட்சிக்கு வந்த சந்திரிகாவின் விதவைத் தாயார் சிறிமாவோ அம்மையார் மூலம் தரப்படுத்தல் என்ற அரச உயர் கல்வி பயங்கரவாதத்தை அமுல்ப் படுத்தியதன் ஊடாக தமிழீழத்தவரின் உயர்கல்விக்கு நெருப்பு வைத்தார். அதற்கு பின்னர் 1978இல் ஆட்சிக்கு வந்த ஜெயவர்த்தனே புதிய கல்வித்திட்டம் என்று தேசிய பாடசாலைகள் என்ற திட்டத்தினை கொண்டு வந்ததன் மூலம் தமிழீழத்தின் கல்விப்பரம்பலை தடுத்து குறிப்பிட்ட இடங்களில் [illegible] கல்வியை மழுங்கடித்தார். அது மட்டுமன்றி தென்னாசியாவின் மிக மூத்த நூல் கருவூலமான யாழ் நூலகத்தை எரியூட்டினார், தமிழீழப் பிரதேசத்தில் இருந்த ஒரேஒரு இடைநிலை கல்வி ஆராய்ச்சி நிலையமான தொண்டமானாறு மூலவள ஆராய்ச்சி நிலையம் தரைமட்டமாக்கப்பட்டது. தமிழீழத்தின் தலைசிறந்த ஆசிரிய கலாசாலைகளில் ஒன்றான பலாலி ஆசிரிய கலாசாலை இராணுவ முகாமாக்கப் பட்டது. பல ஆரம்ப, இடைநிலை, உயர் பள்ளிகள் சிங்களப் படை முகாம்கள் ஆக்கப்பட்டன. மாணவர் சமுதாயம் சிறையிலடைக்கப்பட்டது. பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவற்றையெல்லாம் விட உச்சக் கட்டமாக பண்டாரநாயக்க கொரகொல்ல வம்சத்தில் வந்த சந்திரிகா முன்பிருந்தவர்களின்கொள்கையை



தொடர்கிறார். தமிழீழ சந்ததியினரின் ஆரம்பக்கல்வியை மறுக்கிறார், சிதைப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறார். வன்னியில் இருக்கிற மாணவர்கள் பெற்றோர்களோடு அகதிகளாக இருக்கிறார்கள். மரநிழல்களில் கல்வி கற்பதற்கு மாணவர்கள் முன்வந்தாலும், கல்வி கற்கவேண்டிய அடிப்படைபொருட்கள் கொண்டுவர அனுமதியில்லை. 1990ஆம் ஆண்டின் பின்னர் ஆய்வு கூடச்சாமான் எதுவும் வரவில்லை. இதைவிடக் கொடுமையாதெனில் தமிழீழ சமுதாயம் பலவீனமானதாக இருக்கவேண்டும் என்பதற்கு இளம் பிள்ளைவாத தடுப்பு மருந்தான போலியோவை வழங்கும் தொண்டு நிறுவனங்கள் மீது பல அழுத்தங்களை பிரயோகிக்கின்றார்.

(CRC) என்று சொல்லப்படும் (UNICEF) இன் சர்வதேச சட்டத்தின் 38வது சரத்தின் படி "போர் செய்யும் இருதரப்பும் கூடுமானவரையில் சிறுவர் நலனை பேண வேண்டும்" மேலும் 9வது சரத்தில் குழந்தைகள் ஒரு போதும் தாய் தந்தையரை விட்டு பிரியக் கூடாது. அதே நேரம் 23வது சரத்தில் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தை உளவியல் பாதிப்புறக் கூடாது. இச்சட்டங்கள் எதுவும் சிங்கள அரசு மதிப்பதில்லை.

இந்நிலையில் தமிழீழ எதிர்கால சந்ததியானதை பாதுகாத்து வளர்க்க வேண்டியது புலம்பெயர் தமிழீழ மக்களாகிய எம்முடைய கடமை. நிதியுதவிகள் மாத்திரமன்றி அறிவு பூர்வமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழீழத்திலிருந்து 70களில் 80களில் இடம் பெயர்ந்த பலர் இன்று அறிவு பூர்வமான கற்கை நெறி வல்லுனர்களாக இருக்கின்றனர்.

கடந்த ஆண்டு தமிழீழ கல்விச் சிறுவர் ஆண்டாக தமிழர் புனர் வாழ்வுக் கழகம் பிரகடனப்படுத்தியிருந்தது. அதன் தொடர்ச்சியாக தமிழீழத்தில் பல்வேறு கல்வி முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது மட்டுமன்றி தமிழீழ கல்விக்கழகம் , தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை , மாணவர் அறிவியற் கழகம், தமிழீழ உயர் நுட்ப நிறுவனம் என்பன சமகாலமாக பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி கல்வி வளர்ச்சியை மேற்கொண்டு வருகின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது பல முன்பள்ளி கல்வி நிறுவனங்களை தனது சகோதர நிறுவனங்களின் உதவியோடு விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நிர்வகித்து வருகிறது. இவற்றோடு தமிழீழ சமூகக்கல்வி மன்றமானது உண்மை வரலாறுகளை நூலாக தொகுத்து வெளியிட்டு வருகிறது.

பல்வேறு கல்வி அபிவிருத்தி முயற்சிகள் தடைகள் பல மீறி முன்னெடுக்கப்படுகின்ற இவ்வேளையில் தமிழர் என்று கூறிக்கொள்ளும் சிங்களக் கதிர்காமர் சர்வதேசமெங்கும் அலைந்து தமிழீழ விடுதலைப் போரில் சிறுவர்கள் இணைந்து கொள்வதாக பிரச்சாரப் படுத்தி வருகின்றார். ■



# தேசியத் தலைவரின் மனத்திரையில் கேணல் கிட்டு

மனத்தின் ஆழத்து உள்ளுணர்வுகளை வாத்தைகளில் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஒரு உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான்.


அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வாா்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில், ஒருவரை ஒருவர் ஆழமாக இனங்கண்ட புரிந்துணர்வில், வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான். போராடினான். அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு. வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது.!

கிட்டு, நீ சாகவில்லை, ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்!!



## கிட்டுவின் புகழ்பாடும் நடுகல்

தனது வீரமைந்தனை இழந்த தமிழீழம் சோகத்தில் மூழ்கிக் கிடந்தது. கடைகள் மூடிக்கிடந்தன, பள்ளிகள் அடைத்துக் கிடந்தன, வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன, வீட்டுக்குவீடு தென்னங்குருத்தோலைகள் தோரணமாக தொங்கின. ஒவ்வொரு வீட்டின் முன்பாகவும் தளபதி கிட்டுவின் புகைப்படம் புன்னகை பூத்த வண்ணம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

கேணல் கிட்டுவும் அவருடைய 9 தோழர்களும் பாரதத்தின் பாதகச் செயலுக்குப் பலியான நிகழ்ச்சி தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் மூண்டெழுந்த தீயாய் கனன்றது. தமிழீழத்தின் பத்திரிகைகள்யாவும் கிட்டுவிற்கு அஞ்சலி செலுத்தின. அஞ்சலிச் சுவரொட்டிகளும், துண்டுப்பிரசுரங்களும் குவிந்தன. "புலிகளின் குரல்" கிட்டுவிற்கு அஞ்சலி செலுத்தியது. பண்பாட்டுக்கழகம் கிட்டுவிற்கும் தோழர்களுக்குமாக அர்ப்பணிக்கப்பட்ட ஒலியிழை நாடாவை வெளியிட்டது.

1993 சனவரி 17,18,19 ஆம் நாட்களைத் துக்கதினங்களாகப் புலிகள் பிரகடனப்படுத்தியிருந்தனர், மக்கள் ஆவேசத்துடன் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும், பேரணிகளையும் ஊருக்கு ஊர் நடத்தினர். இந்திய அரசுக்கெதிராக தமிழீழத்தின் குரல் கோபத்துடன் ஒலித்தது.

19ஆம் நாள் நெல்லியடியில் இருந்து தீருவில் திடலை நோக்கி மிகப் பெரியதொரு பேரணி புறப்பட்டது. முடிவே இல்லாத அந்த மாபெரும் பேரணியில் அலை அலையாக மக்கள் சென்றனர். கப்பல் போன்றரதத்தில் கம்பீரமாகக் காட்சிதரும் கிட்டுவின் உருவம் எடுத்துவரப்பட்டது. முன்னால் கடற்புலிகள் அணிவகுத்துச் சென்றனர்.

தீருவில் திடல் கொள்ளாத அளவக்கு மக்கள் திரண்டிருந்தனர். கப்பலில் இருந்த கிட்டுவின் உருவத்துக்கு மாலை அணிவித்துவிட்டு கிட்டுவின் அன்னையும் துணைவியும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுததைக் கண்ட மக்கள் தாங்களும் அழுதனர்.

அந்த வேளையில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தன்னுடைய அருமைத் தோழன் கிட்டுவிற்கு அஞ்சலி செலுத்த வந்தார். இளைய மகனை இழந்த அன்னை இராசலட்சுமி மூத்த மகனைக் கட்டிக்கொண்டு அழுததைக் கண்டோர் கண்கலங்கினார்கள். வீரமரணம் அடைந்த மற்றப் போராளிகளின் பெற்றோர்களும் அழுதனர். தாங்கொணாத தன் துக்கத்தை அடக்கிக் கொண்டு அனைவருக்கும் உறுதி மிக்க தன் விழிகளால் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆறுதல் கூறினார்.

கிட்டுவின் புகழைப் போல நெடிதுயர்ந்து நின்ற நடுகல்லை கிட்டுவின் அன்னை திறந்து வைத்தார்.

# கொக்கட்டிச்சோலை

## தொடரும் தமிழினப் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டமென்றால் தேசிய சர்வதேசிய மட்டத்தில் உள்ளவர்களின் நினைவுக்கு வரும் ஒரு கிராமம் கொக்கட்டிச்சோலையாகும். வரலாற்றுப் பெருமைமிக்க ஸ்ரீ தான்தோன்றீசுவரர் ஆலயத்தை தன்னகத்தே கொண்டிருப்பதால் தமிழ் மக்களால் அறியப்பட்ட இக்கிராமம் 1983களில் இனப்போராட்டம் ஆரம்பித்த பின்னர் மறக்க முடியாத இரண்டு படுகொலைச் சம்பவங்களை அனுபவித்து சர்வதேசமட்டத்தில் இரத்தக் கறை படிந்த வரலாற்றை சுமந்து நிற்கும் கிராமமாக நினைவு கூரப்படுகிறது.

முதலாவது படுகொலைச் சம்பவம் 1987ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி இடம்பெற்றது. இதில் 86 அப்பாவி இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். இச்சம்பவம் இடம்பெற்று நான்கு வருடங்களில் இன்னொரு படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது. 12-6-1991இல் நடைபெற்ற கொக்கட்டிச்சோலை படுகொலையில் 65 பொதுமக்கள் ஒரே நாளில் கொல்லப்பட்டனர்.

முதலாவது படுகொலைச்சம்பவம் இடம்பெற்று எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் பன்னிரண்டு வருடங்கள் நிறைவு பெருகின்றன. ஒரே நாளில் 86 உயிர்களைப் பலிகொண்டதை நினைவு கூரும் வகையில் மகிழடித்தீவு பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெறவுள்ளன.

கொக்கட்டிச்சோலை கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு பிரதேச கிராமமாகும். படுவான்கரை என மக்களால் அழைக்கப்படும் பிரதேசத்தின் மையக்கிராமமாகும். எழுவான்கரை என அழைக்கப்படும் பிரதான நிலப்பகுதியையும் படுவான்கரையையும் மட்டக்களப்பு வாவி பிரிக்கின்றது. இக்கிராமத்திற்கு நேரடியாகச் செல்லவேண்டுமானால் மண்முனைத் துறையூடாக வாவியைக் கடந்தே செல்லவேண்டும். மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே மண்முனைத்துறையூடாக பதின்மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் கொக்கட்டிச் சோலை அமைந்துள்ளது. கொக்கட்டி மரங்கள் நிறைந்த சோலையாக இக்கிராமம் அமைந்த காரணத்தினால் இப்பெயர் உண்டானதாக மக்கள் கூறுவர். பட்டிப்பளை என்று பண்டைய வரலாற்று பெருமைமிக்க பிரதேசத்திலும் அமைந்துள்ளது. நீர்வளமும், நிலவளமும் நிறைந்துள்ள இப்பகுதி நெல் விளைச்சலுக்கும் கால்நடை வளர்ப்பிற்கும் உகந்த பொருளாதார வள சூழலையும் கொண்டிருக்கிறது. நிர்வாகரீதியில் மண்முனை தென்மேற்கு பகுதியில் உள்ளடங்கியுள்ள கொக்கட்டிச் சோலை பிரதேச செயலகப் பிரிவு 3650 ஹெக்டேயர் வாவிப்பரப்பையும் 13510 ஹெக்டேயர் நிலப்பரப்பையும் கொண்டது. இங்கு 5786 குடும்பங்களைச்சேர்ந்த 24409 பேர் வாழ்வதாக மாவட்ட செயலக புள்ளிவிபர கணிப்பு தகவல் தருகிறது.

கொக்கட்டிச்சோலை பிரதேசத்திற்கான நேரடியாக பிரயாணம் செய்வதற்காக படகுச்சேவையே உள்ளது. தரைமார்க்கமாக பிரயாணம் செய்வதாயின் பட்டிருப்ப பாலம் அல்லது வலையிறவு பாலம் என்பவற்றின் ஊடாக பல கிலோ மீற்றர்கள் கடந்து செல்ல வேண்டியிருப்பதால் போராளிகளுக்கு பாதுகாப்பு மிகுந்த பிரதேசமாகவும் அமைந்துள்ளது.

இதனால் 1983இல் போராட்டம் துளிர்விட்டகாலத்திலிருந்து இப்பிரதேசம் போராளிகளின் உறைவிடமாகவே உள்ளது. 1983லிருந்து 1987 வரையும், பின்னர் 1995 செப்டெம்பர் முதல் தற்போது வரையும் படையினர் கட்டுப்பாடில்லாத பிரதேசமாகவே உள்ளது. முதற் கூறில் சகல தமிழ் அமைப்புக்களும் நிலை கொண்டிருந்தன. இப்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரண நடமாட்டத்திற்குரியதாக கொக்கட்டிச் சோலை அமைந்துள்ளது. இதனால் மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு தரப்பினருக்கு சிம்மசொப்பன பிரதேசமாக கொக்கட்டிச்சோலை பிரதேசம் கருதப்பட்டு வருகின்றது.

இந்த பின்னணியில்தான் இந்த படுகொலைச் சம்பவங்களையும் நோக்க வேண்டும். 1987 ஜனவரி27ஆம் திகதி மட்டக்களப்பு நகருக்கு அணித்தாக உள்ள வலையிறவு விசேட அதிரடிப் படையினர் முகாமிலிருந்து இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அங்கிருந்து புறப்பட்ட பாதுகாப்பு அணி மீது கட்டாக்காடு என்ற இடத்தில் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தப்பட்டது. தாண்டியடிக்கும் கட்டாக்காடு என்ற இடத்திற்கும் நடுவில் உள்ள மதகு ஒன்றின்கீழ் புதைக்கப்பட்ட தரைக் கண்ணியில் சிக்கிய தென் ஆபிரிக்க தயாரிப்பான பவல்கவசவாகனம் சிக்கியதில் 14 விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்

இதன் எதிரொலியாக வயல் வாடிகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் சகட்டுமேனி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதில் விவசாயிகள் சிலர் கொல்லப் பட்டார்கள். இராணுவ நடவடிக்கையை தொடரும் வகையில் மண்டூர் பழுகாமம் ஊடாக மேலதிக துருப்பினர் கொக் கட்டிச்சோலைக்கு அனுப்பப்பட்டதுடன் ஹெலிகொப்டர் மூலமும் கொக்கட்டிச்சோலையில் தரையிறக்கப்பட்டார்கள்.

அதேவேளை மகிழடித்தீவு மண்முனைத்துறை வீதியில் அமெரிக்க செரண்டிப் சீபூட் நிறுவனத்தினால் பாரிய இறால் பண்ணை இயங்கிவந்தது. அதன் இலங்கை பங்குதாரராக முன்னால் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாம். தம்பிமுத்து இருந்தார். சுமார் 750 இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், 500 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பையும் வழங்கிய இந்த இறால் பண்ணை படுவான்கரை பிரதேச மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. விடுதலைப் புலிகளின் பண்ணையாக இதனை சித்தரித்தது மட்டுமல்ல அந்த இராணுவ நடவடிக்கையின் போது முற்றாக அழிக்கப்பட்டது.

இந்தப் பண்ணையில் கடமையாற்றிய 86 இளைஞர்களை மகிழடித்தீவு சந்திக்கு அழைத்துச் வந்த விசேட அதிரடிப் படையினர் வரிசையாக நிறுத்தி துப்பாக்கி பிரயோகம் செய்து விட்டு உழவு இயந்திரங்களில் ஏற்றிச்சென்ற திகிலூட்டும் சம்பவத்தை கொக்கட்டிச்சோலை மக்கள் பதட்டத்துடன் இன்றும் நினைவு கூருகிறார்கள். சடலங்களை ஏற்றிய உழவு இயந்திர சாரதியொருவர் (பெயர் குறிப்பிட விரும்பாத) இதுபற்றி கூறுகையில் "நான் தப்பியது தெய்வாதீனமே. இன்றும் நினைக்கும் போது இரத்தம் உறைகிறது. என்னை பின்பக்கம் திரும்பாதே திரும்பினால் உன்கதி அதோகதி, என்று சீருடையினர் மிரட்டினார்கள். இதனால் நான் தலையை அசைக்காது பேயறைந்த நிலையிலிருந்தேன். 'டும்' 'டும்' என வேட்டுச்சத்தம். பின்னர் உழவு இயந்திர பெட்டிக்குள் சடலங்களை எறியும் சத்தம் கேட்டது. பின்னர் அவர்கள் காட்டிய இடத்திற்கு சென்று சடலங்களை இறக்கிவிட்டு வந்தேன். மேலதிகமாக ஒன்றையும் கேட்காதீர்கள்" என்றார். 1987 ஜனவரி 28ஆம் திகதி துப்பாக்கி வேட்டுக்கள், அப்பாவிகளின் மரண ஓலங்களுடன் விடைபெற்றது. மறுநாள் மகிழடித்தீவு வைத்தியசாலை, மணற்பிட்டி சந்தி, அத்திய உம்மாரி ஆகிய இடங்களில் விசேட அதிரடிப்படை முகாம்கள் அமைக்கப்பட்டன. அத்திய உம்மாரி விசேட அதிரடிப்படை முகாம் அமைந்த இடத்திற்கு அருகிலேயே சடலங்கள் எரிக்கப்பட்டதாக அப்பிரதேச மக்கள் இன்றும் நினைவு கூருகிறார்கள்.

இச்சம்பவம் நடைபெற்றபோது ஐக்கிய தேசிய கட்சியே ஆட்சியில் இருந்தது. 1984 ஜனவரியில் அமைக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு அமைச்சின் அமைச்சராக லலித் அத்துலத் முதலி பதவியேற்றார். பாதுகாப்பு செலவினங்கள் 1500 கோடியாக அதிகரிக்கப்பட்டு இனப்பிரச்சினைக்கு இராணுவரீதியான தீர்வு காணும் புதிய முயற்சியில் மேற்குலக நாடுகளின் இராணுவ உதவிகளை இலங்கை பெற்றது. இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு அமெரிக்க தூதரக கட்டிடத்தில் நிறுவப்பட்டு மொசாட், ஷின் பெட் போன்ற உளவு நிறுவனங்கள் செயற்படத் தொடங்கின. பிரித்தானிய பாதுகாப்பு நிறுவனமான கே.எம்.எஸ். என்ற அமைப்பு பொலிஸாரில் இருந்தும், நேரடியாகவும் ஆட்களை தெரிவுசெய்து பயிற்சி வழங்கிய படைப்பிரிவே விசேட அதிரடிப்படையாகும்.

இந்த படைப்பிரிவே முதலாவது கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவத்தின் சூத்திரதாரியாகும். 1987க்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்த விசேட அதிரடிப்படைப்பிரிவு 1990களின் பின்னர் படிப்படியாக கடும் போக்கை மாற்றி இப்போது பொது மக்களோடு உறவுகளை வைத்து புலனாய்வு வேலைகளை மேற்கொண்டு தந்திரோபாய ரீதியில் செயற்பட்டு வருகிறது. அண்மைக்காலமாக சுற்றாடலில் உள்ள மக்களைக் கொண்டு முகாம் சுத்திகரிப்பு போன்ற கட்டாய வேலைகளில் ஈடுபடுத்துவதாக மனித உரிமை நிறுவனங்களால் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றபோதிலும் ஏனைய விடயங்களில் அடக்கி வாசிக்கும்போக்கை கடைப் பிடித்து வருவதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

கொக்கட்டிச்சோலை மக்களால் மறக்க முடியாத மற்றொரு சம்பவம் 1991-6-12 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. அன்றைய தினம் பி.ப.12.55 மணியளவில் கொக்கட்டிச் சோலை, மண்முனை வீதியில் மகிழடித்தீவு கிராமத்திற்கு சமீபமாக இராணுவத்தினர் பிரயாணம் செய்த உழவு இயந்திரம் தரைக்கண்ணி வெடி தாக்குதலுக்கு உள்ளாகியது. இச்சம்பவத்தில் இரண்டு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். ஒருவர் படுகாயமடைந்தார்.

கண்ணிவெடி தாக்குதலை தொடர்ந்து அருகிலுள்ள மகிழடித்தீவு, முதலைக்குடா, முனைக்காடு மக்கள் முதலைக்குடா பாடசாலையிலும், மகிழடித்தீவிலுள்ள குமாரநாயகம் அரிசி ஆலையிலும் தஞ்சமடைந்தார்கள்.

கொக்கட்டிச்சோலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கேணல் டெ.லிக தலைமையில் புறப்பட்ட இராணுவத்தினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்தார்கள்.

முதலைக்குடா பாடசாலைக்கு சென்ற இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை தாக்கியதுடன் 21 ஆண்களை சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அழைத்து வந்து கண்ணிவெடியால் ஏற்பட்ட குழியை சுற்றி மூன்றுமுறை வலம்வரச்செய்து பின்னர் ஒவ்வொருவராக துப்பாக்கியால் சுட்டு குழிக்குள் போட்டு எரித்ததாக கொக்கட்டிச் சோலை விசாரணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

இக்கொடூர நிகழ்வை உறவினர்கள் கண்ணுறக்கூடிய தூரத்தில் நின்று பார்த்தார்கள்.

மகிழடித்தீவு குமாரநாயகம் அரிசி ஆலைக்கு சென்ற இன்னொரு பிரிவினர் சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் 44 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

இறந்தவர்களின் உடல்கள் அரிசி ஆலை வளவில் போட்டு எரிக்கப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் ஆணைக்குழு முன்னர் சாட்சியமளித்தனர்.

மகிழடித்தீவு வாசியான வேலாப்போடி குலசேகரம் அளித்த சாட்சியத்தில்,

"குண்டு வெடிப்பு சத்தம் கேட்டதும் மனைவி பிள்ளைகளுடன் அருகில் உள்ள வீட்டிற்கு ஓடினேன். அப்போது அங்கு வந்த இராணுவத்தினர் என்னை தாக்கி அருகிலுள்ள வீட்டிற்குள் போட்டு தீ வைத்தார்கள். எரிந்து கொண்டிருந்த வீட்டு கூரை மீது ஏறி வெளியே பாய்ந்து

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



# வெற்றியின் விரைவு எங்கள் கைகளிலே

## கொக்கட்டிச்சோலை

நன்றி வீரகேசரி

தமிழர் தாயக விடுதலைப் போரில் வன்னிப் பிரதேசம் இன்று இறுதிப் போர்க்களமாக மாறியுள்ளது மட்டுமல்லாது இது மக்கள் பாதுகாப்பின் இறுதித் தளமாகவும் விளங்குகின்றது. எதிரிகளை எந்தவொரு காரணம் கொண்டும் இனி ஒரு அடிகூட நகர விடாததுடன் எந்தவோர் தந்திரோபாயத்தின் ஊடாகவும் எதிரி, மக்களை அடிமைப்படுத்தி விடுதல் கூடாது என்ற எமது தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைக்கும் கட்டளைகளிற்கு ஏற்பவும் தமிழர் சேனை தற்காப்புப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. வன்னிக்கு வெளியே எதிரிமீது திடீர்த்தாக்குதல்களும் எதிரி ஆக்கிரமிப்பு எல்லைப் பகுதிகளில் தற்காப்பு போரும் நடைபெற்றவண்ணம் இருக்கின்றன. தற்போது வன்னிப்பிரதேசமானது சிங்களப்படைகளின் முற்றுகையில் இருக்கின்றது. இராணுவ முற்றுகை ஒரு புறம் நீண்டு கொண்டிருக்க, முழுமையான பொருளாதார முற்றுகையும் மிக இறுக்கமாக நடைபெற்ற வண்ணம் சந்திரிகா அரசு வன்னியின் பொறுமையை அல்லது உயிர் வாழ்தலிற்கான காலக் கெடுவை அளவிட்டும் கொண்டிருக்கும்போது அவர்கள் வெற்றியடைகின்றார்கள் என்பதே வரலாறு கூறும் பாடமாகும்.

எதிரியை, அடக்குமுறையாளர்களை முற்றுகையிட்டு அழிப்பதன் மூலம் அதாவது ஓர் முற்றுகைச் சமர் மூலம் தமது இலக்கை அடைந்த சுதந்திரப் போராட்டமாக எம் முன்னிருப்பது வியட்னாம் போராட்டமே. அதற்கு முன்பு அமெரிக்க சுதந்திரப் போராட்டம் நடைபெற்றதும் வரலாறு. வியட்னாம் போராட்டமானது இன்றைய நெருக்கடியான சூழல்களில் நினைவுபடுத்தப்படுவதற்கு காரணம், மக்கள் அனைவரும் தமது ஒன்றுபட்ட சக்தியினை உயிர் பறிக்கப்படுகின்ற நிலையில்கூட வழங்கி, உறுதி தளராது போராடி வெல்லப்பட்ட சுதந்திரப் போராட்டமாக அமையப் பெற்றது என்பதனால் ஆகும். அது மட்டுமன்றி 1945ஆம் ஆண்டு ஜப்பானியர்களை எதிர்த்தும் அதன் பின்னர் பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்தும் 1960 களில் அமெரிக்கர்களை எதிர்த்தும் அதாவது மூன்று மிகப்பெரிய இராணுவ பலம் கொண்ட நாடுகளுடன் போராடி வெற்றி பெற்றவர்கள் வியட்னாமிய மக்கள். இங்கு சிறப்பாகக் குறிப்பிடுவது யாதெனில், வியட்னாமிய மக்கள் என்றுமே, தளராத தாயகப் பற்றையும் தலைமைப் பற்றையும் அர்ப்பணிப்புகளையும் கொண்டு விளங்கியமையே ஆகும்.

மக்களிற்கும் ஏற்பட்டது. ஆனால் இவர்களால் போரிட முடியவில்லை. காரணம் அதற்கான பயிற்சிகளையும் தந்திரோபாயங்களையும் இவர்கள் பெற்றிருக்கவில்லை. தற்போது அக்குறைபாட்டினை எமது தேசியத்தலைவர் நீக்கிக்கொண்டிருக்கிறார். வியட்னாமிய மக்கள், எழுச்சியினை போருடனும் போரை எழுச்சியுடனும் ஒன்றிணைத்து, சகல வளங்களையும் பயன்படுத்தியே போரைச் செய்தனர். அத்தகைய ஒன்றுதிரட்டலைத்தான் தியன்-பியன்-பூ என்ற முற்றுகைச் சமரின் போது பயன்படுத்தி பிரெஞ்சுப் படையின் ஆதிக்கத்தினை முறியடித்தனர். 1945ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மக்கள் படையினதும், விடுதலைப்படையினதும் தாக்குதலானது பிரெஞ்சுப்படைகளின் (தியன்-பியன்-பூ) இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவத்தளம் மீதான முற்றுகை 55 நாட்கள் நடைபெற்று நிறைவெய்தியது. இதில் 3000 துருப்புகள் கொல்லப்பட்டனர். 8000 படையினர், மக்கள் படையினால், கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இந்த முற்றுகைச் சமருடன் பிரெஞ்சுப்படை பின்வாங்கியது.

மிப்பை முறியடித்து வெற்றி பெற்றனர். தமிழீழத்தைப் பொறுத்தவரை போரில், முற்றுகைச் சமர்களையும், முற்றுகை உடைப்புச் சமர்களையும் சம காலத்தில் செய்ய வேண்டிய நிலையிலே போராட்டம் வளர்ந்து செல்கிறது. காரணம் தமிழ் மண்ணில் எதிரியானவன் நீண்டகால நிலைப்படுத்தலுடன், அடிக்கடி ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் செய்து வருவதனால் இரண்டு வகையான சமர்களைச் செய்ய வேண்டியுள்ளது. அதாவது நிலைப்படுத்தலில் நாம் எதிரியினை முற்றுகையிட வேண்டும். எம்மை முற்றுகையிடும் எதிரியை அதனை உடைத்து எறியவும் வேண்டும்.

மாபெரும் செஞ்சேனைக்கும் நாசிப் படைகளிற்குமான சமர்களில் ரஷ்ய மக்களால் தோல்விகளும், குறைபாடுகளும், இழப்புகளும், நட்டங்களும் தற்காலிகமானவையே என எடுத்துக் கொண்டு அவற்றை நிறமும் சீர்செய்து வெற்றியின் அடித்தளத்தை பலப்படுத்திய வண்ணம் முன்னேறினார்கள் இவ்வாறு தான் எம் பெருந்தலைவருக்கும், இழப்புகள் புதியவை அல்ல என்ற

# மக்கள் பங்கேற்புடன் முற்றுகைச்சமர்களும் முற்றுகை உடைப்புச் சமர்களும்

கின்றது. ஆக்கிரமிப்பாளர்கள் தமது ஆக்கிரமிப்பின் அனைத்து தந்திரோபாயங்களும் தோல்வியில் முடிவடைகின்ற தருணம், இறுதியாக உபயோகிக்கும் தந்திரோபாயமே முழுமையான முற்றுகை ஆகும். இதனையே யாழ்குடாநாட்டில் யு.என்.பி அரசாங்கம் செய்ய முனைந்து தோல்வியில் முடிவடைந்தது மட்டுமல்ல, அதில் பங்கு பற்றியோர்களும் இன்று இல்லை என்பது, ஆக்கிரமிப்பாளர்களை வரலாறு ஒரு போதும் தண்டிக்காது விடுவதில்லை என்பதற்கு சான்றாகும்.

இன்று வன்னி தமிழீழத்திற்கான போரின் இறுதித் தளமாகவும் இறுதிக் களமாகவும் ஆகிவிட்ட நிலையில், அது முற்றுகைக்கு உள்ளாகிய நிலையில், இந்த முற்றுகை உடைப்பு என்பதே போரின் வெற்றியாக அமையப்போகிறது என்பதும், இதுவே தாயகத்தை மீட்பதற்கான இறுதிக் களமாக விளங்கும் என்பதும் யதார்த்தமாகப் போகின்றது. காரணம் ஆக்கிரமிப்பாளரின் பலங்கள் இங்கேயே குவிக்கப்பட்டுள்ளன. எனவே மேற்குறிப்பிட்ட வரலாற்றுப் புரள்வு ஒன்று இங்கே நடைபெறப்போகின்ற நிலையில், உலகில் சுதந்திரத்திற்காக போராடிய நாடுகள், இனங்களின் வெற்றியின் இறுதி நிகழ்வுக்காகப் பல முற்றுகைச் சமர்களும், முற்றுகை உடைப்புச் சமர்களும் நடந்தேறியுள்ள இந்த வரலாற்று நிகழ்வுகளை எமது வரலாற்று நிகழ்விற்கும் ஆதாரப்படுத்துவோம்.

உலகில், அண்மையில் நடந்த சுதந்திரப் போராட்ட வரலாறுகளை எடுத்து நோக்குகையில் மக்கள் அல்லது தாயக மீட்புப் படைகள் எதிரியை அல்லது ஆக்கிரமிப்பாளர்களை முற்றுகையிட்டு அதில் வெற்றி பெற்ற நிகழ்வுடன் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதும் அடுத்ததாக ஆக்கிரமிப்பாளர்களால் மக்கள் முற்றுகையிடப்பட்டபோது அதனை மக்கள் தமது தேசியப் படைகளுடன் இணைந்து முறியடித்து ஆக்கிரமிப்பு நடவடிக்கையினை முடிவுக்கு கொண்டுவந்த வரலாறும் உண்டு. அடக்கு முறைக்கு உள்ளான மக்கள் தமது ஒன்றுபட்ட பலத்தினால் ஆக்கிரமிப்பு நடவடிக்கையினை முடிவு

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பங்கு பெறுகின்ற ஓர் தேசிய பாதுகாப்பிற்கான ஆயுதப்படையொன்று உருவாக்கப்படுகின்றபோது மண்ணை ஆக்கிரமிக்கவும் மக்களின் சுதந்திரத்தைப் பறிக்கவும் எந்தவொரு வலிமையான எதிரி முயற்சி செய்தாலும் அதனை முறியடிக்க முடியும் என்பதை வியட்னாமிய மக்களின் போராட்டம் காட்டி நிற்கின்றது. இத்தகைய ஓர் விடுதலைப் போராட்டமானது மக்கள் மயப்படுத்தப்பட்ட ஆயுதப்போராட்டமாக மாற்றப்பட்டதற்கு இரண்டிற்கு மேற்பட்ட தசாப்தங்கள் எடுத்தன. தமிழீழ விடுதலைப் போராட்டமானது எமது தேசியத் தலைவரால் ஆயுதப்போராட்டமாக மாற்றப்பட்டதில் இருந்து அகிம்சைப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறியதும் பின்னர் ஆயுதப்போராட்டம் கொரில்லா வடிவம் பெற்று, பின்பு காப்பரண்கள் அமைத்து போராடுவதில் இருந்து இன்று மரபுவழிப் படையாக பெருவளர்ச்சி கண்டு இற்றைவரை மூன்றாவது தசாப்தத்தை எட்டிப் பிடித்துவிட்ட நிலையில் உள்ளது. இத்தக்காலப் பகுதியில் வியட்னாமிய மக்கள் படைபோல் தமிழீழ மக்களும் தம்மை ஆயுத மயப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இந்த ஆயுத மயப்படுத்தல் ஆனது ஒட்டுமொத்தமாக தேசிய ரீதியில் ஓர் மக்கள் புரட்சி வெடிப்புக்குத் நீண்டகாலம் எடுக்காது என்பதனை காலம் எமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

எதிரி எண்ணிக்கையில் பலமடங்கு பெரிதாகவும் அவன் மக்களை அடிமைப் படுத்த பயன்படுத்தும் ஆயுதங்கள் பயங்கரமானதாகவும் இருந்த போதும், தங்கள் புரட்சிகர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் வியட்னாமிய மக்கள் பின்நிற்கவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும்போது எல்லாம் களத்தில் இறங்கி எதிரிக்கு எதிராகப் போரிட்டார்கள். இத்தகைய சந்தர்ப்பங்கள் தமிழீழ தாயகப் பகுதிகளில் வாழும் தமிழ்

தொடர்ந்து வடவியட்னாம் அமெரிக்க ஆதரவுடன் இயங்கி வந்த தென் வியட்னாமை ஒன்றிணைத்து ஒன்றுபட்ட வியட்னாம் சோசலிச குடியரசை உருவாக்க அமெரிக்காவுடன் போரிட்டு போராடி இருந்தது. அங்கும் அவர்கள் அனைவரும் போராடி தென்வியட்னாமை விடுவித்தார்கள். இவ்வாறுதான் இந்திய இராணுவத்துக்கு எதிராக தமிழீழமும் போராடி வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அதாவது, ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட இந்தியப்படையினதும் தாக்குதல்களை முறியடித்து இறுதியில் ஒப்பரேசன் செக்மேற்-1,2,3 என்ற இராணுவ நடவடிக்கையினை எமது தலைவரும், போராளிகளும் மிகவும் துணிகரமாக முறியடித்து இந்தியப் படையினை வெளியேற்றினர்.

எவ்வாறு வியட்னாம் போராட்டம் முற்றுகைச் சமர் ஒன்றைச் செய்து போரை முடிவுக்கு கொண்டுவந்ததோ அவ்வாறே முற்றுகை உடைப்புச் சமர் ஒன்றைச் செய்து ரஷ்ய மக்கள், ஜேர்மனிய நாசிப்படைகளின் ஆக்கிர

சிந்தனையில் அவற்றைப்பற்றி கவலைப்படாது அதனை குறைத்து அல்லது சீர்செய்துகொண்டு எமது போராட்டத்தை வழிநடத்துகின்றார்.

இன்று எமது தாயகத்தில் வன்னிப் பிரதேசம் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டது போன்று மொஸ்கோ, ஸ்ராலின் கிராட், லெனின் கிராட் என்ற நகரங்கள் நாசிப்படைகளின் முற்றுகையில் இருந்த வேளை கட்சித்தலைமையும் இராணுவத் தளபதிகளும் விடுத்த செய்திகளிற்கு மக்கள் எவ்வாறு தலை சாய்த்து நாசிப்படைகளை முறியடித்து செயற்பட்டனர் என்பதைப் பார்ப்போம்.

மொஸ்கோ பகுதி நாசிகளால் சூழப்பட்டவேளை, ஒக்டோபர் 20ஆம் திகதி கட்சியின் மத்திய குழுவும், அரச பாதுகாப்புக் குழுவும் மொஸ்கோவில் முற்றுகை நிலையினை பிரகடனம் செய்தது. தலைநகரைப் பாதுகாக்கும் துருப்புகளின் எல்லாப்பிரிவுகளிற்கும் பல்வேறு வகையான நடைமுறைகளை அறிவித்தனர். எதிரியுடன் கூட்டுச் சேர்தல், வதந்தி பரப்புவோர், கொள்ளையடிப்போர் என்போருக்கு மக்களே எதிரப்புத் தெரிவித்து அவர்களை தண்டனைக்கு உள்ளாக்கினார்கள்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)



ஒ...அந்த நாள் எங்கள் இதயத்தை இடி வந்து தாக்கிய நாள். எம்முயிர்த் தோழன் விதையாகிப்போன செய்தியது எம் செவிப்பறையை அதிரவைத்த நாள். எம் வாழ்வுக் காலமதில் காலக்கடல் கரைத்துச் சென்ற நாட்களில் சோகத்தின் எல்லையைத் தொட்ட நாள். நீளும் எங்கள் இவன் கனவினை, நனவினை வாழ்வில் சுமப்போம் என்பதை எங்கள் எழுத்தால் மட்டுமல்ல எம் உள்ளத்தாலும் உறுதியெடுத்துக் கொள் ளும் நாள். எம் கரம் பிடிக்கும் எழுது கோலால் இவன் வாழ்வினை முழுமையாக வரைந்திட முடியாது. என்றாலும் எழுதத் துடித்தது எம் மனம். சிறு துளியென்றாலும் உன்னால் முடிந்ததை எழுது என்றது. இவனின் வீர வரலாற்றில் சிறு துளிகள் இங்கே...

நேரியன்! இவன் உள்ளத்தில் ஊற் றெடுக்கும் நேர்மை இவன் பெயரினுள்ளும் பொதிந்து இருந்தது. கருணை இவன் கண்களில் குடியிருந்தது. தெளிவான பார்வை. ஆழமான, கருத்துமிக்க வார்த்தை கள், கண்டோரை எளிதில் கவரும் இவன் இதழ் சிந்தும் காந்தப் புன்னகை, பணிவைத் தன்னில் சுமந்திருக்கும் அழகிய வதனம். பெருமையில்லாத உள்ளம். ஆணுக்கு ஏற்ற அளவான உயரம். உயரத்திற்கேற்ற ஆரோக்கியமான உடல்வாகு. இவை எல்லாம் இணைந்து இவனை அலங்கரித் தன.

1993ஆம் ஆண்டு கார்த்திகை மாத நடுப்பகுதியில் தன்னை முழுமையாகக் கரிகாலன் சேனையில் இணைத்துக் கொண்டான். தனது ஆரம்பப் பயிற்சியினை வடமராட்சிப் பிரதேசத்தில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் அடிப்படை இராணு வப் பயிற்சி முகாமான சரத்பாபு 7இல் பெற்றுக் கொண்டான். பயிற்சி முகாமில் தனது உடல் வலு, உள வலு என்பவற்றைப் பெருக்கிக் கொண்டான். பயிற்சியினை முடித்துக்கொண்ட இவன் ஒரு விடுதலைப் போராட்டத்தில் சமர் எவ்வளவு முக்கியமோ அதேயளவு முக்கியத்துவம் கல்விக்கும் உண்டு என்ற தலைவரின் கணிப்புக்கு அமைய அரசியல் கற்கை நெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டான்.

அரசியல் கற்கை நெறி ஆரம்பிக்கையில் தலைவரின் கருத்துரையை உன்னிப்பாக அவதானித்த இவன் அக்கற்கை நெறியின் அவசியத்தையுணர்ந்து அதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினான். கற்கை நெறி ஆரம்பிக்கும் அன்றுதான் இவன் முதல் முதல் தலைவர் அவர்களை நேரே தன் விழிகளால் சந்தித்துக் கொண்டான். ஆதலால் அந்த நாளை தன் வாழ்வுக் காலத்தில் என்றும் கரைந்து போகாத நினைவாக தன் நெஞ்சமதில் பதித்து வைத்தான்.

போராளிகளின் வாழ்வு என்றும் இயங்கிக் கொண்டிருக்கும் இதயம் போல, கல்வி யறிவும், களப் பயிற்சியறிவும் மாறி மாறி ஊட்டப்பட்டது. இவ்வாறு இவனது போராட்ட வாழ்வு கரைந்து கொண்டிருந்த போது சந்திரிகாம்மையாரின் பேரினவாதப் பேய் கள் 'முன்னேறிப்பாய்தல்' என்ற நட வடிக்கை மூலம் வலிகாமப் பிரதேசத்தை விழுங்கிக் கொண்டிருந்தது. இதனால் அங்கு வாழ்ந்த மக்கள் ஏதிலிகளாக்கப்பட்டு இவன் இருந்த முகாம் வீதியெங்கும் வீசியெறியப்பட்டார்கள். இதனை அவதா னித்த இவன் மனம் குமுறியது. களம் செல்லத் துடித்தான். இந்த வேளையில் தலைவரின் திட்டத்திற்கமைய முன்னேறிய பகைவன் மீது பாய புலிகள் தயாரா



மேஜர் நேரியன்

கினார்கள். இவனும் அணியொன்றில் இணைக்கப்பட்டான் எனினும் புலிப் பாய்ச்சல் நடவடிக்கை எதிர்பார்த்ததை விட இலகுவாக வெற்றி கொள்ளப்பட்டதால் அவனது அணி சண்டைக்குச் செல்ல வில்லை.

இவ்வாறு இவனது களவாழ்வு நகர்ந்து கொண்டிருந்த போது 60 எம். எம். மோட்டார் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டான். இவன் எதையும் கற்றுக் கொள்வதில் கற்பூரம் என்பதால் குறுகியகால பயிற்சி யுடன் மோட்டாரை இயக்குவதில் தேர்ச்சி பெற்றவனாக வெளியேறினான். வெளி யேறிய இவன் தனது மோட்டாருடன் முதலாவது களத்தில் எதிரியைச் சந்திக் கிறான். அந்தக் களம் திருவடிநிலைப் பக்கமாக இருந்து முன்னேறிய எதிரி மீதான தாக்குதல். அத்தாக்குதலின் போது இவனது வோக்கி டோக்கி செயலிழந்து விட்டது. ஒரு இக்கட்டான சூழ்நிலையில் எறிகணை ஏவவேண்டும். உடனே தனது அறிவு, அனுபவத்தைப் பயன்படுத்தி டாங்கியில் சத்தம் வரும் நிலை நோக்கி மோட்டாரை ஏவினான். ஏவிய எறிகணைகள் எதிரியின் டாங்கிமீதும் அதனைச் சூழவுள்ள பிர தேசத்துள் மீதும் வீழ்ந்து வெடித்தன. இக்களத்தில் இவனது மோட்டாரை இயக்கும் ஆற்றல் வெளிப்பட்டது.

மறுநாள் இவன் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை எதிர் கொள்ள களம் விரைந்தான். அங்கு முன்னேறிய பகைவன் மீது நேர்த்தியான சூடுகளை வழங்கி எதிரியின் பக்கம் பலத்த இழப்பு ஏற்பட வழி வகுத்தான். 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை கோப்பாய் பிரதேசத்தை விழுங்கிக் கொண்டிருந்தபோது இவன் அக்களத்திலிருந்து பின் நகர்த்தப்பட்டு வன்னிக்கு அனுப்பப்பட்டான். அங்கு தனது கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த போது சந்திரிகா அம்மையாரின் பேரினவாதப் பூதம் ஆனையிறவில் இருந்து கிளிநகர் நோக்கி தனது ஆக்கிரமிப்புக் கரத்தை நீட்டின. சத்ஜெய 1, 11 என ஆக்கிரமிப்பு முயற்சிகள் தோல்வியைத் தழுவ சத்ஜெய 111 எனத் தொடர்ந்தது. சத்ஜெய 111 இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்ள இவன் 120 எம். எம். மோட்டார் அணியில் ஒருவனாக நின்று செயற்பட்டான். பின்பு ஆனையிறவு பரந்தன் மீதான ஊடுருவல் தாக்குதலின் போது 120 எம். எம். மோட்டார் ஒன்றுக்கு தலைமை தாங்கிச் சென்று நேர்த்தியான சூடுகளை வழங்கி தாக்குதல் அணிகளுக்கு பலம் சேர்த்தான்.

மே 13, 1997 இல் மிகப்பெரும் பகைவெள்ளம் தாண்டிக்குளம் ஊடாகவும், நெடுங்கேணியூடாகவும் நகர்ந்தது. இதனை எதிர்கொள்ள இவன் 120 எம். எம். பீரங்கியொன்றுக்கு தலைமை தாங்கிச் சென்று முன்னேறும் பகைவன் மீதும் தாண்டிக்குளம் மீதான ஊடுருவல் தாக்குதல், பெரியமடு மீதான ஊடுருவல் தாக்குதல் போன்றவற்றில் தனது பீரங்கி மூலம் நேர்த்தியான சூடுகளை வழங்கி தாக்குதல் அணியின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தான். சிறிது காலம், சிங்களப் படைக்கு பெரும் சவாலாக புளியங் குளத்தில் அமைந்திருந்த புலிகளின் முகாமினுள் இருந்து 82 எம். எம். மோட்டார் மூலம் முன்னேறும் பகைவனுக்குச் சவா லாக அமைந்தான். 60 எம். எம், 81 எம். எம், 82 எம். எம் , 120 எம். எம், போன்ற பீரங்கிகளை இயக்குவதிலும் வரைபடத் தைக் கையாளுவதிலும் சிறந்து விளங்கிய இவன் விடுதலைப் புலிகளின் பீரங்கிப் படையணியில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவனானான்.

சமர்க்களத்தில் இருந்து பின்நகர்த்தப் பட்ட இவன் தன் அரசியல் கற்கை நெறியினைத் தொடர்ந்தான். அக்கற்கை நெறியினைக்கற்கும் போராளிகளில் குறிப் பிடத்தக்கவர்களில் ஒருவன். அத்துடன் இவனது கல்லூரியில் நடைபெறும் கலை நிகழ்வுகள் அனைத்திலும் இவனது பிரசன்னம் இருக்கும். இவன் மேடை யேறினால் மேடையே மலர்ந்து சிரிக்கும். தான் ஏற்று நடிக்கும் பாத்திரத்துடன் ஒன்றிப்போய் நடித்து சபையோரை வியக்கவைப்பான். மேலும் சிறந்தொரு பேச்சாளனாகவும் விளங்கினான். எந்த வொரு விடயத்தையும் அணுகி ஆராய்ந்து சிறந்தொரு பேச்சை முன்வைப்பான். அத்துடன் துப்பாக்கி மூலம் குறிபார்த்து சுடும் கலையிலும் இவன் வல்லவன்தான்.

இவனது ஆற்றல், ஆளுமை கண்ட பொறுப்பாளரால் அனைத்துலகத் தொடர் பகத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் ஆக நியமிக்கப்பட்டான். போராளிகளின் உணர் வலைகளை புரிந்து கொள்ளும் ஆற்றல் இவனுக்கு இருந்ததால் சிறந்த முறையில் தன் நிர்வாகத்தை நகர்த்திச் சென்றான். அதன் மூலம் போராளிகள், பொறுப்பாளர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றான்.

இவ்வாறு இவனது போராட்ட வாழ்வு நகர்ந்து கொண்டிருந்தவேளை தலைவர் அவர்களின் சிந்தனையினால் சிருஷ்டிக் கப்பட்ட திட்டமொன்றிற்காக தேர்வு செய்யப்பட்டான். அப்பணி மிகவும் கடின மானது. அப்பணி தொலைதூரத்தில் இவனுக்காகக் காத்திருந்தது. ஆதலால் தொலைதூரம் செல்ல ஆயத்தமானான். செல்லுமுன் தலைவர் அவர்களைச் சந்தித்து அத்திட்டம் பற்றி அறிவினைப் பெற்று தன் பணிக்குச் சென்றான். அங்கு தனது பணியினை மிகவும் சிறப்பான முறையில் செயல்படுத்தி தலைவரின் பாராட்டைப் பெற்றான். இவ்வாறு தன் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை அன்புத் தலைவரின் அழைப்பை ஏற்று அலைகடல் மீதினில் ஏறிவர ஆயத்த மானான்.

அந்த வேளை அந்தக் கடற்கரையின் நீருக்குள் பாதம் பதித்து தனக்கெனக் காத்திருக்கும் விசைப்படகு நோக்கி நகர்கின்றான் நேரியன். அந்த விசைப் படகை அடைந்து அதற்குள் ஏறிக் கொள்கிறான். அதற்குள் ஏறிக் கொண்டவன் தன் மனதுக்குள்ளும் பல கனவுகளை ஏற்றிக்கொண்டான். அன்புத் தலைவரின் தரிசனம், அன்னை மண்ணின் தரிசனம், அன்புத் தோழர்களின் தரிசனம், அன்பு மக்களின் தரிசனம், என்று அவனின் எண்ண அலைகள் ஆர்ப்பரித்து எழுந்து கொண்டிருந்தவேளை விசைப்படகின் இயந்திரம் தன் இதயத்துடிப்பை இயக் கியது. பயணம் அலைகடலினூடே நீண்டதொரு பயணம். ஆழ்கடலை இவனது படகு அண்மித்துக் கொண்டிருந்தவேளை கருமுகில் கூட்டங்கள் விண்மீன்களை விழுங்கிக் கொண்டிருந்தன. சிறிது நேரத் தில் வான்தாய் தன் கண்ணீர்க் கடலின் கட்டுடைத்துவிட்டாள். இடிமின்னல் இடையி டையே தம் கண்களைத் திறந்து மூடின. கடல்த் தாயும் இயற்கையன்னையின் சீற்றத்தால் குழம்பிப் போனாள். அதனால் பேரலைகள் எழுந்தன. பயணம் தொடர்ந் தார்கள். யார் அறிவார்கள்?. அந்தக் கொடியோனின் குண்டுகள் இவர்களின் உயிர்குடிக்க காத்திருக்கின்றது என்று. கச்சதீவு கடல் மீது பேரினவாதப் பேய்களின் மூன்று டோராக்கள் நேர் எதிரே தம் உயிர் பறிக்கும் கருவிகளின் குழாய்களை நீட்டி விட்டு இருந்தன. எதிர்பாராத பெரும் சமர் மூண்டது. பகைவனின் மூன்று படகுகளும் இவனது படகைச் சூழ்ந்து கொண்டன. இவர்களிடம் ஆள் ஆயுத பலம் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. எனினும் பிரபாகரனின் பிள்ளைகள் இவர்கள். இவர் களிடம் மனோபலம் மலையாக இருந்தது. அந்த வேளையில் எதிரியின் படகில் இருந்து பாய்ந்து வந்த குண்டொன்று இவன் மார்பைத் துளைக்கின்றது. இவன் கடல் மீது தன் இதழ்களைப் பதித்து முத்த மொன்றை அளித்துவிட்டு மாவீரர் என்ற மகுடந்தனைச் சூடிக்கொள்கிறான். இவனின் வித்துடலை கடலன்னை தன்னோடு அணைத்துக் கொள்கிறாள். இவன் கரம் சுமந்த துப்பாக்கி இளைய புலிவீரன் கரம்மீ திலிருந்து எதிரியின் திசை நோக்கி அனல் கக்குகின்றது. இவன் நினைவுகளைச் சுமந்து கரிகாலன் படை, பகைகுகையி னுள்ளே பாய்கின்றது. தமிழீழம் என்ற பூவிங்கே மலரும் மட்டும் இப்பாய்ச்சல் ஓயாது. ■






தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive